# செட்டிகுளத்தில் திடீரென தோன்றிய புத்தர் சிலை



02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 208 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 27ஆம் திகதி திங்கட்கிழமை
(10.04.2023) ஹிஜ்ரி 1444, ரமழான் - 18, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## கமெண்ட் கந்தர்...




# ஈழத் தமிழருக்கு அரசியலுரிமை!



## கச்சதீவை மீளப்பெறல் உள்ளிட்ட 13 கோரிக்கைகளை மோடியிடம் முன்வைத்தார் ஸ்டாலின்

கச்சதீவை மீளப் பெறுதல், தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையைப் பாதுகாத்தல், ஈழத் தமிழர்களுக்கு சமமான குடியுரிமையுடன் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தல் ஆகியவை உள்ளிட்ட 13 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்றுமுன்தினம் (08) கையளித்துள்ளார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரை வழங்கினார்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சர்வதேச கடல் எல்லைக் கோட்டைத் தாண்டிச் செல்லும் நிகழ்வுகளில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அவர்களது பாரம்பரிய கடற்பரப்பில் மீன்பிடிக்கும்போது அடிக்கடி கைதுசெய்யப்படுகின்றனர்.

நமது மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவது மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசால் நீண்டகாலமாக தடுத்துவைக்கப்படுவது தமிழக மீனவர்கள் மத்தியில் கவலையையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, பாக் வளைகுடா பகுதிகளில் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பாக்குநீரிணை பகுதியிலுள்ள இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வாழும் மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காக நேரடியாக மீன்பிடித் தொழிலை நம்பியுள்ளனர். சர்வதேச கடல் எல்லைக் கோட்டைத் தாண்டிச்செல்லும் நிகழ்வுகளில் இலங்கை கடற்படையின் தாக்குதல் மற்றும் தாக்குதலுக்கு வழிவகுக்கும் போது இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை சீர்குலைக்கும்.

எனவே, 'கச்சதீவை' இந்தியாவுக்கு மீளப்பெறுவது மற்றும் பாக்குநீரிணை வளைகுடா பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை ...

02 பக்கம்

# சுண்ணாம்பில் புற்றுநோய்க் கூறுகள்

### யாழில் மேற்கொண்ட ஆய்வுகளில் வெளியான அதிர்ச்சித் தகவல்

02 பக்கம்

# நிலையான வளர்ச்சிக்கு ஒன்றிணைக!

## ஐ.எம்.எவ். கோரிக்கை

இலங்கை எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார சவாலை சமாளிக்க அனைவரும் ஒன்றிணைந்து, மீட்புக்கு ஆதரவளித்து நிலையான வளர்ச்சிக்கு ஊக்குவிக்க வேண்டுமென சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட ...

02 பக்கம்

# தேர்தல் ஆணைக்குழு பிரதமருடன் இன்று பேச்சு

## நாளையும் முக்கிய கலந்துரையாடலுக்கு ஏற்பாடு

*(நா. தினுஷா)*

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் தேசிய தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று இன்று (10) இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலை தொடர்ந்து நாளை (11) தேர்தல் ஆணைக்குழுவில் முக்கிய பேச்சுவார்த்தையொன்றை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (09) தெரிவித்தார்.

பிரதமருடனான கலந்துரையாடலில் எடுக்கப்படும்...

02 பக்கம்




ஐக்கிய மக்கள் சக்தியின் உயர்மட்ட பிரமுகர்கள் முக்கியமான பல விடயங்களில் முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் அறிவுரையை கேட்பது சஜித் கூட்டணியிலுள்ள தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லையாம்.

அண்மையில் பாராளுமன்றக் குழுக்களுக்கு எம்.பிக்களை நியமிக்கும் விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரமுகர் ஒருவர், பீரிஸின் ஆலோசனையை கேட்டுக்கொண்டிருந்தாராம். அந்த இடத்தில் இருந்த...

02 பக்கம்

# ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை இல்லாமல் போகலாம்

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு



*(யாழ். செய்தியாளர்)*

ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை இரும்புக்கரங்கொண்டு அடக்குவதற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படுவதாக தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சர்வதேச சமூகத்திற்கு கொடுத்த வாக்குறுதியை மீறி புதிய சட்டத்தைக் கொண்டுவர முயற்சித்தால் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை இல்லாமல் போகுமென்ற அச்சம் அரசுக்கு...

02 பக்கம்

# புதிய சட்டத்தில் வெளிப்படையில்லை

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டம் வெளிப்படைத்தன்மையற்றது எனத் தெரிவித்துள்ள இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சாய்பி, ஜனாதிபதிக்குரிய அதிகாரம் மேலோங்குவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜீ.எஸ்.பி. பிளஸ் வர்த்தக சலுகை இலங்கைக்கு வழங்க வேண்டுமா, இல்லையா என ஐரோப்பிய ஒன்றியம்...

02 பக்கம்

# நல்லிணக்கத்துக்கு புதிய ஆணைக்குழு

## அரசாங்கம் தீவிர கவனம்

இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக தேசிய நல்லிணக்க ஐக்கிய ஆணைக்குழுவொன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கென 21 நபர்களைக்கொண்ட ஆணைக்குழுவை அமைப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அவர்கள் பாலினம் உட்பட இலங்கையின் பல்லினத் தன்மையை பிரதிநிதித்துவம் செய்வார்கள்.

அமைச்சரவை இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை கடந்த வாரம் ஏற்றுக்கொண்டது.

02 பக்கம்

# அடிப்படை மனித உரிமைக்குப் பாதிப்பு

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவிப்பு

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், அடிப்படை மனித உரிமைகளை அத்துமீறல் செய்யும் அதிகாரத்தை அதிகாரிகளுக்கு வழங்கும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உடனடியாக திரும்பப் பெறுமாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் பரிந்துரைக்கிறது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை...

02 பக்கம்

# எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை நாளை சமர்ப்பிப்பு

*(நா. தினுஷா)*

தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் இறுதி அறிக்கை நாளை (11) பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் அந்தக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நாட்டின் 25 மாவட்டங்களிலுமுள்ள 341 தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக தேசிய எல்லை நிர்ணயக்...

02 பக்கம்




# மயக்க மருந்துகள் தொடர்பில் தீவிர விசாரணை அவசியம்

## சுகாதார தொழில் வல்லுநர்கள் சங்கம் வலியுறுத்து

*(நா. தினுஷா)*

உடல்நிலை கோளாறின் காரணமாக கர்ப்பிணித் தாயொருவர் உயிரிழந்த சம்பவம் பேராதெனிய போதனா வைத்தியசாலையில் அண்மையில் பதிவாகியிருந்தது. அறுவை சிகிச்சையின்போது பயன்படுத்தப்படும் மயக்க மருந்தின் காரணமாகவே இந்த உயிரிழப்பு இடம்பெற்றதாக அந்த வைத்தியசாலையின் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

ஆனால், இந்தச் சம்பவத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும், இந்த மருந்து தொடர்பில் விரைவான தொழில்நுட்ப பரிசோதனைகளை முன்னெடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சுகாதார தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் கோரினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேராதெனிய போதனா வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாயொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பல்வேறு தர்க்கங்கள் உருவாகியுள்ளன. உயிரிழந்த கர்ப்பிணித் தாய்க்கு உடல்நிலை கோளாறு ஏற்பட்டு, கடந்த 02ஆம் திகதி உயிரிழந்திருந்தார். இந்த மரணத்துடன் பேராதெனிய போதனா வைத்தியசாலை, மயக்க மருந்தில் கோளாறு காணப்படுவதாக அறிவித்திருந்தது.

அந்த அறிக்கையை தொடர்ந்து சுகாதார அமைச்சினால் விநியோகிக்கப்படும் மயக்க மருந்து விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்தச் சமபவத்துடன் இன்னுமொரு சம்பவமும் இடம்பெற்றிருந்தது. மியன்மாருக்குரிய இதனை ஒத்த மருந்து கடந்த 04ஆம் திகதியிலிருந்து நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டு வருவதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. எனவே, இந்த விடயங்கள்ள ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாக இருக்கின்றன என்பது தொடர்பில், மிகவும் ஆழமான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகவுள்ளது.

குறிப்பாக, மருந்தொன்று நோயாளர் ஒருவரின் உடல்நிலையில் கோளாறை ஏற்படுத்துகின்றது என்றால் மருந்தில் குறையிருக்க கூடும். அவ்வாறு இல்லாவிட்டால் சிகிச்சை முறை, உபகரணங்கள் என்பவற்றின் தவறாகவும் இருக்கக்கூடும். எனவே, நேரடியாக அதனை தவறான மருந்து என்று கூறிவிடவும் முடியாது.



எனவே, இந்த மருந்தை பெற்றுக்கொடுப்பதற்கு முன்னர் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை எவ்வாறான அறிக்கையை பெற்றுக்கொடுத்துள்ளது, அவ்வாறான அறிக்கை எதனையும் வழங்கவில்லை என்றால் எதனடிப்படையில் அந்த அறிக்கை பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்பது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

மருந்தொன்றினால் கோளாறு ஏற்பட்டதன் பின்னர் முன்னெடுக்கவேண்டிய விடயம் தொடர்பிலும், நோயாளர் உயிரிழந்தமைக்கு காரணத்தை மருந்தின் மீது மாத்திரம் சுட்டிக்காட்டாமல் தொழில்நுட்ப ரீதியான பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும். இலங்கையில் அதற்கான வாய்ப்புகள் இல்லை என்றால், இந்தியா போன்ற நாடுகளில் அனுமதிப்பெற்றஇரசாயன ஆய்வுக்கூடங்கள் இருக்கின்றன. உடனடியாக இந்த மருந்தின் மாதிரியை அந்த இரசாயன ஆய்வுக் கூடங்களுக்கு அனுப்பி அதன் தரநிலை குறித்து தொழில்நுட்ப ரீதியான அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்த மருந்து தொடர்பிலான பிரச்சினை ஏன் பேராதெனிய வைத்தியசாலையில் மாத்திரம் ஏற்பட்டது என்பது சிக்கலுக்குரிய விடயமாகும். இந்த மருந்து 24 இற்கும் மேற்பட்ட வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மூன்று கட்டங்களாக இந்த மருந்து பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. ராகம போதனா வைத்தியசாலை போன்ற வைத்தியசாலைகளுக்கும் இந்த மருந்து பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த வைத்தியசாலைகளில் இதுபோன்ற கோளாறு நிலை ஏற்பட்டதற்கான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை. ஒத்த மருந்தினால் ஒரேயொரு வைத்தியசாலையில் மாத்திரம் கோளாறு நிலை ஏற்படுகின்றது என்றால் ஏனைய வைத்தியசாலைகளில் ஏன் கோளாறு ஏற்படவில்லை என்பதும் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

இந்த மருந்து, முதலில் எமது நாட்டில் பதிவு செய்யப்பட்டு பின்னர் அதன் பதிவு நீக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் மியன்மாரினால் வழங்கப்பட்டு, விரைவாக பகிர்ந்தளிக்கப்பட்ட இந்த மருந்து இலங்கையில் ஒருபோதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பதிவு செய்யப்படவும் இல்லை. மியன்மார் என்பது மருந்து உற்பத்தி செய்யும் நாடும் இல்லை. இந்த மருந்து பங்களாதேஷினாலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது.

அவ்வாறு இருக்கையில், இந்த மருந்தினால் கோளாறு ஏற்படவில்லை என்று சுகாதார அமைச்சு எவ்வாறு உறுதியாக கூறமுடியும். மேற்குறிப்பிட்ட காரணங்களுக்கு இடையில் ஏதாவது தொடர்பு இருக்கமுடியும்.

இந்த மருந்தினால் கோளாறு ஏற்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது. அதுவும் ஒரு மருத்துவமனையில் மாத்திரமே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்த மருந்தை தற்காலிகமாக இடைநிறுத்த அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கு பதிலாக வேறு மருந்தை இறக்குமதி செய்கிறார்கள். அதனை மீண்டும் பகிர்ந்தளிக்கிறார்கள். பகிர்ந்தளிக்கப்பட்ட மருந்து தொடர்பில் எவ்விதமான தரநிர்ணய அறிக்கையும் இல்லை. இதற்கு முன்னர் நாட்டில் பயன்படுத்தவும் இல்லை. ஒரு மருந்தில் கோளாறு ஏற்பட்டவுடன் இன்னுமொரு வகையைச் சேர்ந்த மருந்து வகை எவ்வாறு கிடைத்தது ?.

இந்த மருந்து மியன்மார் அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்டது என்று அரசாங்கம் கூறினாலும், அந்த நாடு எமது நாட்டுக்கு நன்கொடை வழங்கும் நிலையில் இருக்கிறதா என்பது இன்னுமொரு பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினைகள் குறித்து உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

# அளவீட்டுக் கருவிகள் தொடர்பில் முறையிடலாம்

### விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

தரமற்ற, எடை மற்றும் அளவீட்டு கருவிகளை பயன்படுத்துபவர்கள் தொடர்பில் அறிவிப்பதற்காக விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, எடை மற்றும் அளவிடும் கருவிகளின் தரம் குறித்து 011 218 22 53 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் என அளவீட்டு அலகு, நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் சுஜீவ அக்குரந்திலக்க தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த தொலைபேசி இலக்கம் 24 மணிநேரமும் செயற்பாட்டில் இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## உஷ்...

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அந்த ஐ.ம.ச. பிரமுகருக்கு டோஸ் கொடுத்தாராம்.

பேராசிரியர் பீரிஸ் முன்னர் எப்படி கதைத்தார் இப்போது எப்படிக் கதைக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும்.தமிழ் எம்.பிக்களுக்கு பாராளுமன்ற குழுக்களில் உரிய இடங்களை வழங்குங்கள்.. என்று பொரிந்து தள்ளினாராம் மனோ.

## நிலையான வளர்ச்சிக்கு...

வதிவிடப் பிரதிநிதி பீட்டர் ப்ருயர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பது குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் யூடியூப் தளத்துக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதிகரிக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் தவறான கொள்கைகளிலிருந்து மீள்வதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவும். எதிர்வரும் நான்கு ஆண்டுகளில் சுமார் 03 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் அங்கீகரித்துள்ளது என்றார்.

## அடிப்படை மனித...

அரசாங்கம் கொண்டுவந்தால், அந்தச் சட்ட மூலம் சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்க வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டதுடன், அந்தச் சட்டத்தை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக புதிய சட்டத்தை கொண்டுவருவதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

எவ்வாறாயினும், தற்போதுள்ள சட்டத்தின் பலவீனங்களைச் சரிசெய்வதற்குப் பதிலாக, புதிய சட்டம், சொத்து சேதம், திருட்டு மற்றும் கொள்ளை போன்ற குற்றங்களை உள்ளடக்கிய பயங்கரவாதத்தை மறுவரையறை செய்துள்ளதுடன் பேச்சு சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தியுள்ளது.

முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், அமைதியான விமர்சகர்களை மௌனமாக்குவதற்கும் சிறுபான்மையினருக்கு எதிரான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம், போராட்டங்களை ஒடுக்குவதற்கும், எதிர்ப்பாளர்களை தன்னிச்சையாகக் காவலில் வைப்பதற்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதன் ஆபத்து மாறாமல் இருப்பதாகக் கூறுகிறது.

## சுண்ணாம்பில்...

யாழ்ப்பாண மக்கள் வெற்றிலைக்குப் பயன்படுத்தும் சுண்ணாம்பில் புற்றுநோயை உண்டாக்கும் கூறுகள் காணப்படுவதாக ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் வழிநடத்தலில் பல்கலைக்கழக இளநிலை இறுதியாண்டு மாணவர் ஒருவர் நடத்திய ஆய்விலேயே இந்த விடயம் வெளிவந்துள்ளது.

2019ஆம் ஆண்டு சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில், வாய்ப்புற்று நோயாளிகள் மற்றும் வாய்ப்புற்று நோய் மரணங்கள் என்பன யாழ்ப்பாணத்தில் அதிகம் பதிவாகியுள்ளன. இந்நிலையிலேயே மாணவர் ஒருவர் அது தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுத்தார். அதன் ஒரு கட்டமாக வெற்றிலை போடும் போது, அதனுடன் பாவிக்கும் சுண்ணாம்புகளை யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் பெறப்பட்டு அதன் மாதிரிகளை ஆய்வு பரிசோதனைக்காக அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

பாகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கையில், பரிசோதிக்கப்பட்ட சுண்ணாம்பு மாதிரிகளில் புற்றுநோய்களை உண்டாக்கக்கூடிய 'ரோடமைன் - பி' என்ற கூறுகள் காணப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதுடன் இந்த வகை சுண்ணாம்புகளை உடனடியாக சந்தை விற்பனையில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்படும் சுண்ணாம்பில் மாத்திரமே இந்த கூறுகள் அதிகளவில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## தேர்தல் ஆணைக்குழு...

தீர்மானங்களுக்கமைய, ஆணைக்குழுவின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து நாளை தீர்மான முடிவுகள் எடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை பெற்றுக்கொடுக்குமாறு தொடர்ச்சியான கோரிக்கை முன்வைக்கப்பட்டுவந்தபோதும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து இதுவரையில் எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை என தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, எதிர்வரும் 25ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு திகதி குறித்துள்ளது. அதன் பிரகாரம், போதிய நிதியின்மை மற்றும் வாக்குச்சீட்டு அச்சிடாமை உள்ளிட்ட காரணங்களினால், கடந்த மாத இறுதியில் முன்னெடுக்கப்பட வேண்டியிருந்த தபால்மூல வாக்குப் பதிவு இடம்பெற்றிருக்கவில்லை. திகதி குறிப்பிடப்படாமல் தபால்மூல வாக்களிப்பை ஒத்தி வைக்க தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

## ஈழத் தமிழருக்கு...

மீட்டெடுப்பது ஆகியவை தமிழ்நாடு அரசின் முதன்மையான குறிக்கோளாக உள்ளது. எனவே, மீனவர்கள் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண கச்சதீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை மீட்டெடுப்பதன் மூலமே, பாரம்பரியக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க முடியும் என்பதை தமிழ்நாடு அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

ஈழத் தமிழர்களுக்கு சமமான குடியுரிமை மற்றும் அரசியல் உரிமைகள் அளிப்பது தொடர்பாக இலங்கை அரசினை வலியுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தெற்கு ரயில்வேயின் கோரிக்கையின் அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி இடையே புதிய அகல ரயில் பாதை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நில உரிமை மாற்றம் செய்வதற்கான செயல்முறையைத் தொடங்குவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இருப்பினும், இராமேஸ்வரம் - தனுஷ்கோடி இடையே புதிய ரயில் பாதை அமையும் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை அமையும் பகுதி குறுக்கிடுவதால், நிலம் கையகப்படுத்துவதற்கான 3(2) அறிவிப்பின் செயல்முறை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

மேலும், 43.82 ஹெக்டேயர் அரசு நிலம் மற்றும் 28.61 ஹெக்டேயர் வனப்பகுதி நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்த பின்பே, இத்திட்டத்தின் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என தெற்கு ரயில்வே மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அப்பகுதியின் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தில் உள்ள பலவீனமான சுற்றுச்சூழல் அமைப்பைக் கருத்தில் கொண்டு புதிய ரயில் பாதை அமைப்பதற்கு இந்தப் பகுதி பொருத்தமானது அல்ல என்று தமிழ்நாடு அரசு கருதுகிறது. எனவே, இத்திட்டத்தினை மறுபரிசீலனை செய்யலாம் அல்லது சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்த நிபுணர்களின் உள்ளீடுகளின் அடிப்படையில் இந்தத் திட்டத்தினை பகுப்பாய்வு செய்யலாம் அல்லது இந்தத் திட்டத்தின் நிலையற்ற தன்மையின் காரணமாக கைவிடலாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

சர்வதேச பல்வகை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான தமிழ்நாட்டின் தொலைநோக்குப் பார்வையைக் கருத்தில் கொண்டு, அடுத்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு தனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)*

## செட்டிகுளத்தில்...

*(வவுனியா செய்தியாளர்)*

வவுனியா, செட்டிகுளத்தில் தமிழ் மக்கள் வாழும் பகுதியில் நேற்று (09) மதியம் திடீரென புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம் - மன்னார் வீதியில், செட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பழைய புகையிரத நிலையம் முன்பாக வீதியோரத்தில் சீமெந்து கற்களை அடுக்கி சுமார் ஒன்றரை அடி உயரமுடைய புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதிக்கு வந்த சில நபர்கள் கற்களை அடுக்கி புத்தர் சிலையை வைத்து விட்டு அங்கிருந்து சென்றுள்ளதாக தெரியவருகின்றது.

அந்தப் பகுதியில் தமிழ் மக்களே பூர்வீகமாக வாழ்ந்து வருவதுடன், குறித்த சிலை வைக்கப்பட்ட இடத்திற்கு அண்மித்ததாக செட்டிகுளம் முருகன் கோவில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## எல்லை நிர்ணயக்...

குழுவின் உறுப்பினர் கே. தவலிங்கம் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (09) தெரிவித்தார்.

இதுவரையில், உள்ளூராட்சி மன்றங்களில் இருந்த 8800 உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4800 வரையில் குறைப்பதற்கு இந்த அறிக்கையினூடாக அந்தக் குழு பரிந்துரை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்றவகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் இந்தக் குழு கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி நிருவப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டதுடன், அதன் உறுப்பினர்களாக ஜயலத் திசாநாயக்க, டபிள்யூ.எம்.எம்.ஆர். அதிகாரி, கே.தவலிங்கம் மற்றும் ஐ.ஏ. ஹமீட் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## புதிய சட்டத்தில்...

தீர்மானம் எடுக்கும் முன்னர் புதிய சட்ட மாற்றீடு தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தீவில் இடம்பெற்றுவரும் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளது. ஜீ.எஸ்.பி. பிளஸ் ஒப்பந்தத்தை நீடிக்கத் தவறும் பட்சத்தில் சுமார் 500 மில்லியன் டொலர் மதிப்பிலான வர்த்தக சலுகை இழக்கப்படும் நிலை உருவாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## நல்லிணக்கத்துக்கு...

தற்போது இந்தச் சட்டமூலத்தை உருவாக்கும் நடவடிக்கைகள் சட்ட வரைவாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பிலான ஆவணத்தை இன நல்லிணக்க முயற்சியுடன் தொடர்புபட்ட முக்கிய பங்குதாரர்களிடம் இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது.

அனைத்து உறுப்பினர்களும் சட்டம், மனித உரிமைகள், மனிதாபிமான சட்டம், வரலாறு, சமூக அறிவியல், உளவியல், மோதலுக்குப் பிந்தைய மற்றும் நல்லிணக்க ஆய்வுகள் தொடர்பான துறைகளில் அவர்களின் அறிவு அல்லது நடைமுறை அனுபவத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் நேர்மை மற்றும் நம்பகத்தன்மை கொண்ட நபர்களாக இருக்க வேண்டும். அல்லது விசாரணை மற்றும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தொடர்புடைய பிற தகுதிகளைக் கொண்டிருக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிப்பார். அவர்கள் மூன்று வருடங்களுக்கு பதவி வகிப்பார்கள். அரசமைப்பு பேரவை 3 உறுப்பினர்களை பரிந்துரை செய்யும். அவர்களில் ஒருவரை ஜனாதிபதி தலைவராக நியமிப்பார்.

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பல அம்சங்கள் உத்தேச சட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. 2018இல் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்தவேளை உருவாக்கப்பட்ட நகல் சட்டத்திலும் தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பல அம்சங்கள் காணப்பட்டன.

## ஜீ.எஸ்.பி...

ஏற்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

வடமராட்சியில் நேற்றுமுன்தினம் (08) மாலை ஊடகங்களுக்கு புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து கருத்து தெரிவித்த போது இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

பாரிய பொருளாதாரச் சிக்கல் ஒன்று இந்த நாட்டை பீடித்திருக்கின்றது. அதிலிருந்து இந்த நாட்டை மீட்கப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி வருகின்றார். அவ்வாறு நாடு மீண்டதாக ஒரு மாயத் தோற்றம் ஏற்படுத்தப்படுகின்றது.

ஆனால், மிக விரைவிலே நாடு மிக மோசமான பொருளாதார சூழ்நிலைக்கு செல்ல இருக்கிறது. அப்படியான வேளையிலே திரும்பவும் மக்கள் போராட்டங்கள் ஏற்படக் கூடும் என்ற காரணத்தினால் அதை கட்டுப்படுத்துவதற்கு இந்தச் சட்டத்தை கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றனர்.

ஏனெனில், கடந்த காலங்கள் போன்று மீண்டும் மக்கள் போராட்டங்கள் ஏற்படுகின்றபோது அதனைக் கட்டுப்படுத்த அல்லது ஒடுக்குவதற்கு தற்போது ஜனாதிபதியின் கையில் இருக்கின்ற சட்டங்கள் போதாது என்று அவர் கருதுகின்றார்.

அதேபோன்று பயங்கரவாத தடைச் சட்டங்களை பிரயோகித்தால் சர்வதேச சமூகத்துக்கு கொடுத்த வாக்குறுதியை மீறுகிறதாக அமையும் என்பதாலே ஐரோப்பிய ஒன்றியத்தினால் கொடுக்கப்படுகின்ற ஜீ.எஸ்.பி. வரிச் சலுகை கூட இல்லாமல் போகின்ற நிலைமை ஏற்படும்.

ஆகவே, புதியதொரு நல்ல விடயத்தை தாங்கள் செய்வது போல மிக மிக மோசமான ஒரு செயலையே செய்வதற்கு முனைகின்றனர். குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக காட்டிக் கொண்டு அதனை விட மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமென்ற இந்தச் சட்டத்தை கொண்டுவர முயற்சிக்கின்றனர்.

அதாவது பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குகிறேன் என்று ஒரு மாயத் தோற்றத்தை காட்டிக் கொண்டும் சர்வதேச நியமங்களுக்கு அமையவே புதிய சட்டத்தையே கொண்டு வருகிறேன் என்பதற்காகவே இந்த முயற்சி எடுக்கப்படுகிறது.

இந்த சட்டம் கொண்டு வரப்படுவதற்கான உண்மையான நோக்கம் என்னவெனில், மக்கள் ஜனாதிபதிக்கு எதிராக அல்லது அரசுக்கு எதிராகவோ தமது எதிர்ப்பை காண்பிக்கின்ற போது அதனை இரும்பு கரம் கொண்டு அடக்குவதற்கான ஒரு கருவியாகத்தான் அல்லது முன்னெச்சரிக்கையாகத் தான் முன்கூட்டியே இந்தச் சட்டத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முனைந்திருக்கின்றது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்பது அரசியலமைப்பை மீறுகின்றது. அவ்வாறு அரசியலமைப்பு மீறுகின்றது என்று சொல்லியோ அல்லது வேறு காரணங்களைக் கூறியோ நீதிமன்றம் சென்றாலும் அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம் என்றும் நீதிமன்றம் சொல்லலாம். அதேநேரம் சர்வஜன வாக்கெடுப்பும் தேவை என்றும் கூட நீதிமன்றம் சொல்லலாம்.

ஆனால், இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் சர்வஜன வாக்கெடுப்பு என்ற ஒன்றைத் தவிர மற்ற அனைத்தையும் அரசாங்கம் செய்யலாம். ஏனெனில், ஆளுங்கட்சியுடன் எதிர்க்கட்சியில் இருக்கின்ற சில தரப்புகளும் இணையப் போவதாக அறிகின்றோம்.

ஆனாலும் இந்த அரசுக்கு இப்பொழுது மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாவிட்டாலும் எதிர்க்கட்சிகளில் இருக்கின்ற பலர் இப்போது கட்சிதாவுவதற்கு இருக்கின்றனர். ஆகையினாலே அரசாங்கம் மூன்று இரண்டு பெரும்பான்மையை இலகுவாகவே பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையினால் அதை மட்டும் வைத்துக் கொண்டு நாம் இதனை தடுக்க முடியாது. ஆகவே அரசின் இந்தப் புதிய சட்டம் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களை மீறுகிறது என்பதை நாம் தெளிவாக சொல்லுகின்றோம்.

நாம் மட்டுமல்ல, இன்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து பலரும் இந்த விடயங்களை கூறுகின்றனர்.

இதனால் ஜீ.எஸ்.பி. வரிச் சலுகை கிடைக்காமல் போகலாம் என்பதும் தெரிந்த விடயம். அதன் மூலம்தான் இந்த சட்டமூலம் இயற்றுகின்ற அரசின் யோசனையை மாற்றலாம் என்று நாங்கள் நினைக்கின்றோம்.

அதேபோல, ஐரோப்பிய ஒன்றியமும் சர்வதேச நிறுவனங்களும் கூட இதனுடைய தாற்பரியத்தை அல்லது மோசமான தன்மையை உணர்ந்து அதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்.

ஆகவே, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கு நாங்கள் எப்படியாக நாடு பூராகவும் எழுச்சி ஏற்படுத்தினோமோ அதே போல் இந்த மோசமான சட்டத்தை தடுப்பதற்கு மக்களிடையே சென்று மக்கள் மத்தியில் விளக்கங்களை கொடுத்து ஒரு எழுச்சியை ஏற்படுத்த முனைகிறேன்.

இவ்வாறு நாட்டு மக்களிடத்தே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல்களையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி மக்கள் எழுச்சியை எடுத்துக் காட்டுவோமாக இருந்தால் இந்த சட்டமூலத்தை நிறைவேற்றாமல் தடுக்கலாம் என்று கருதுகின்றேன் என்றார்.

# தமிழர் இருப்புகளை பாதுகாக்க பொதுக்கட்டமைப்பு உருவாக்கம்




(வவுனியா நிருபர்)

அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தமிழர்களின் இருப்பை பாதுகாப்பதற்குமான பொதுக்கட்டமைப்பு ஒன்று வவுனியாவில் நேற்று (09) உருவாக்கப்பட்டது.

தமிழர் பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் அரசாங்கத்தின் நெருக்கடிகள் மற்றும் பௌத்தமயமாக்கல் போன்ற செயற்பாடுகளைத் தடுத்துநிறுத்துவதற்கான பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளுடனான கலந்துரையாடல் ஒன்று வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது குறித்த விடயங்கள் தொடர்பாக எதிர்வினையாற்றுவதற்காக இரு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புகள் மற்றும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள், காணாமலாக்கப்பட்டோர் விடயம், வனவளத் திணைக்களத்தால் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமை, தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பான தரவுகளை சேகரித்து அவற்றை துல்லியமாக இனங்காண்பதற்காக 7 பேர் கொண்ட கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

அத்துடன், அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் மாபெரும் சாத்வீகப் போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்காக மற்றொரு கட்டமைப்பும் உருவாக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மதகுருமார்கள், தமிழ் அரசுக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் விடுதலைக் கழகம், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிச கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ தமிழ் ஈழ விடுதலை இயக்கம் போன்ற அரசியல் கட்சிகளும், பொது அமைப்பினரும் கலந்துகொண்டனர்.

# நான்கு வருடங்களாகியும் நீதி கிடைக்கவில்லை

## நியாயத்துக்காக போராடவேண்டியது அவசியமாகியுள்ளதாக ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு



எறும்புகள் சீனியை மொய்ப்பதுபோன்று அரசியல்வாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றி தாமே பெரியவர்கள் என்று எண்ணி செயற்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளதென பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனை, லூசியா தேவாலயத்தில் நேற்று (09) இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின ஆராதனைகளில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று நான்கு வருடங்கள் நிறைவடைந்துள்ளன. ஆனால், இதுவரையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி நிலைநாட்டப்படவில்லை.

எதற்காக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. மக்கள் அறியாதவற்றை கூறிவருகிறார்கள். அதற்காகவே நீதிக்காக போராடவேண்டியது அவசியமாக இருக்கிறது.

அதுவே, கிறிஸ்தவ வாதமாகும். உயிர்த்தெழுதல் என்பது மாற்றத்திற்கான போராட்டமாகும்.

சிலர் மாற்ற முயற்சிக்க வேண்டாம் என்று இருக்கும் முறை தொடரட்டும் என்று கூறினாலும் போராட்டத்தினூடாக இளைஞர்கள் இலங்கையில் அரசியலை மாற்றினார்கள் - என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் பங்குனி மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** யார் மீதும் கோபப்படுவதால் பிரயோசனமில்லை, உடல் நலத்தை கெடுத்துக்கொள்ளும் முயற்சிகள் வேண்டாம்.

**ரிஷபம்:** நினைத்த காரியத்தில் வெற்றி, புகழ் அனைத்தையும் பெறுவீர்கள், வியாபார லாபம் உண்டு.

**மிதுனம்:** விண்ணப்பித்திருந்த கடன் தொகை கிடைக்கப்பெறுவீர்கள், உடல் நோய்களை அசட்டை செய்யாதீர்கள்.

**கடகம்:** உங்கள் பிள்ளைகளின் செயற்பாடுகள் தர்மசங்கடத்தை ஏற்படுத்தும், தன ரீதியில் நட்டங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** வாகனங்களால் சிக்கல்கள் சிரமங்களை அனுபவிப்பீர்கள், தாயின் உடல் நலம் பாதிப்படையலாம்.

**கன்னி:** மன தைரியத்துடன் அனைத்திலும் வெற்றிகொள்வீர்கள், நட்பின் இலக்கணம் என்ன என்பதை புரிந்துகொள்வீர்கள்.

**துலாம்:** உங்கள் குதர்க்கமான பேச்சுகளால் பகை, சண்டை ஏற்படலாம், பணத்தை கவனமாகக் கையாளுங்கள்.

**விருச்சகம்:** காரணம் தெரியாத பயத்தால் மனம் படபடக்கும், கணவன் - மனைவி உறவு திருப்திகரமான அமையும்.

**தனுசு:** வெளியிடத்தில் அவமானமும் காரியக் கேடும் ஏற்படலாம், தேவை எதுவோ அதற்கு மட்டும் செலவு செய்யுங்கள்.

**மகரம்:** கைவிட்டுப்போனவை இன்று கிடைப்பதன் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள், மூத்த சகோதர உதவி கிடைக்கும்.

**கும்பம்:** தொழில் வியாபாரத்தில் நீங்கள் நினைத்தவை நடக்கும், மற்றவர்களிடம் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம்.

**மீனம்:** எதிரிகளின் எதிர்பாராத தாக்குதலுக்கு உள்ளாகலாம், உங்கள் சொத்துகள் மீது கவனம் செலுத்துங்கள்.

**திதி** : சதுர்த்தி மு.ப.8.37 வரை பின் பஞ்சமி

**நட்சத்திரம்** : அனுஷம் பி.ப.1.39 வரை பின் கேட்டை

**யோகம்** : மரணயோகம் மு.ப. 6.07 பின் சித்த யோகம்

**வார சூலம்** : கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : பி.ப. 12.02 – 1.02 மணி வரை

**ராகு காலம்** : 7.34 – 9.04 மணி வரை

**எமகண்டம்** : 10.34 – 12.04 மணி வரை

**குளிகை** : 1.34 – 3.04 மணி வரை

**சந்திராஷ்டமம்** : மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்


**தன அதிஷ்டம்** : புனர்பூசம்,விசாகம், பூரட்டாதி, பூசம், அனுஷம்,உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : -----

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# டிஜிட்டல் தொழில்நுட்பம் - ஆங்கிலமொழியில் மாணவர்கள் தகைமைப்படுத்தப்பட வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு




இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஆங்கிலக் கல்வியுடன் தகவல் தொழில்நுட்பக் கல்வியும் வழங்கப்பட வேண்டும் எனவும், இதனூடாக இந்நாட்டின் பிள்ளைகள் அறிவுத்தகமை பெற்றவர்களாக இருக்கவேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

திஸ்ஸமஹாராம யடாலதிஸ்ஸ ஆரம்பப் பிரிவு பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறைக்கான உபகரணங்களை நன்கொடையாக வழங்கும் பிரபஞ்சம் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டில் 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு இலவச சீருடைகள் மற்றும் இலவச மதிய உணவு வழங்கிய மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 30ஆவது நினைவு தினம் எதிர்வரும் மே முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை நினைவுகூரும் விதமாக30 பாடசாலைகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அன்னாரது 100ஆவது பிறந்தநாள் அடுத்த வருடம் இடம்பெறுவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதனை நினைவுகூரும் விதமாக மேலும் 100 பாடசாலைகளில் இந்த பிரபஞ்சம் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் - என்றார்.

# 'அரகலய' போராட்டத்துக்கு ஓராண்டு நிறைவு

இலங்கை வரலாற்றில் ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் எழுச்சியாக கருதப்படும் 2022 "அரகலய"வுக்கு ஒருவருட நிறைவை நினைவுகூரும் வகையில் போராட்ட செயற்பாட்டாளர்கள் சிலர் நேற்று (09) கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கோட்ட பெயில் ரணில் சேல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல் மற்றும் மக்கள் பலத்தைக் கட்டியெழுப்புதல் உள்ளிட்ட போராட்டக் கோஷங்களை உள்ளடக்கிய பதாகைகளை ஏந்தியவண்ணம் அவர்கள் எதிர்ப்பையும் வெளியிட்டிருந்தார்கள்.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 09ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடலில் சிறிய எண்ணிக்கையிலானவர்களின் பங்கேற்புடன் ஆரம்பமான இந்தப் போராட்டம் மே மாதம் 09ஆம் திகதியாகும்போது பாரிய போராட்டக் களமாக மாறியது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் 2022ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த பொதுஜன பெரமுனவின் தலைமையிலான அரசாங்கம் உள்ளிட்ட அரச அதிகாரிகள், இந்தப் போராட்டத்தின் காரணமாக அவர்களின் பதவிகளை கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன், போராட்டத்தில் பங்கேற்றிருந்த மற்றும் அதன் காரணமாக இடம்பெற்ற சம்பவங்களின் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 40 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நுவரெலியா – கண்டி இ.போ.ச. டிப்போக்களுக்கு இந்திய அரசின் 26 புதிய பஸ்கள் கையளிப்பு




(அந்துவன்)

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் கடன் உதவித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட புதிய பஸ்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று (09) போக்குவரத்து அமைச்சர்பந்துல குணவர்தன தலைமையில் நுவரெலியா கிரகரி வாவி பகுதியில் இடம்பெற்றது.

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் உள்ள 7 டிப்போக்களுக்கு 26 புதிய பஸ்கள் இதன்போது கையளிக்கப்பட்டன. மேலும் இந்த புதிய பஸ்களை தோட்ட மற்றும் கிராமப்புற வீதிகளில் பயணிக்கவும், அதன்மூலம் கிராமப்புற மற்றும் தோட்டப்புற மக்களுக்கு முறையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதுமே இதன் நோக்கமாகும்.

இந்தப் புதிய பஸ்கள் நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன், நுவரெலியா, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்த மற்றும் கண்டி மாவட்டங்களில் நாவலப்பிட்டி மற்றும் கம்பளை ஆகிய டிப்போக்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. இதன்போது, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.பி.ரத்நாயக்க, எஸ்.பி. திசாநாயக்க, மருதபாண்டி ரமேஸ்வரன் மற்றும் டிப்போ அத்தியட்சகர்கள், டிப்போ ஊழியர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

# அனுமதிப்பத்திரமின்றி 56 ஆடுகளை லொறியில் ஏற்றிச்சென்ற இருவர் கைது

உரிம நிபந்தனைகளை மீறி சிறிய ரக லொறியொன்றில் 56 ஆடுகளை ஏற்றிச் சென்ற சந்தேக நபர்கள் இருவர் ரம்பகொக்குண பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டதாக நிக்கவெரட்டிய தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.


குறித்த ஆடுகளை இறைச்சிக்காக கல்கமுவ பிரதேசத்திலிருந்து கொழும்பு நோக்கி கொண்டுசென்றுகொண்டிருந்த தருணத்திலே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாக தெரியவருகிறது.

சந்தேகநபர்கள் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை கடுமையாக மீறியுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் கட்டுபொத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிக்கவெரட்டிய தலைமையகப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நுவரெலியாவில் உயிர்த்த ஞாயிறு தின வழிபாடுகள்





(அந்துவன்)

உலகமெங்கும் உள்ள கிறிஸ்தவ மக்கள் நேற்று (09) உயிர்த்த ஞாயிறு தின வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

உலக மீட்பராக அவதரித்த இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மூன்று தினங்களின் பின்னர் உயிர்த்தெழுந்ததைக் கொண்டாடும் வகையில் உயிர்த்த ஞாயிறு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

பாதுகாப்புக்கு மத்தியில் நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன் திருச்சிலுவை ஆலயத்தில் உயிர்த்த ஞாயிறு தின பிரதான வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆலய பங்குத்தந்தை நியூமன் பீரிஸ் தலைமையில் இந்த உயிர்த்த ஞாயிறு தின விசேட வழிபாடுகள் நடத்தப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு விசேட கூட்டுத் திருப்பலி ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன், பக்தர்களுக்கு ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் புனித தீர்த்தமும் வழங்கப்பட்டது.

இதன்போது 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின வழிபாடுகளின் போது உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அவர்களது ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனையும் முன்னெடுக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தின வழிபாட்டினை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு தேவாலயங்களுக்கு வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய நாட்டுப் பிரஜை தெமோதரையில் உயிரிழப்பு

ரஷ்ய நாட்டுப் பிரஜை ஒருவர் எல்ல பகுதியிலுள்ள சிறிய ஸ்ரீபாதமலைக்கு சென்று மீண்டும் திரும்பி வருகையில் குறித்த நபருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது.

38 வயதுடைய குறித்த ரஷ்ய நாட்டுப் பிரஜை தெமோதர வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட பின்னர் வைத்தியசாலையில் குறித்த நபர் மரணித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த நபர் மாரடைப்பின் காரணமாக இறந்திருக்கலாமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸ் சுற்றுலாப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.




பேருவளை, சீனன்கோட்டை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை 2014ஆம் ஆண்டின் சாதாரண தர வகுப்பு மாணவர்களின் ஏற்பாட்டிலான ஒன்றுகூடலும் இப்தார் நிகழ்வும் நேற்று முன்தினம் (8) மாலை பேருவளை மருதானை மனாரா பீச் ஹோட்டலில் சிறப்பாக இடம்பெற்றது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஏப்ரல் 10 ஆம் திகதி, திங்கட்கிழமை

# ரணில் கவனிப்பாரா?

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி ரோஹினி மாரசிங்கவுடன் இணைந்து செயற்பட முடியாதென ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

உறுப்பினர்களான கலாநிதி விஜித நாணயக்கார, கலாநிதி நிமல் கருணாசிறி மற்றும் களுபான பியரதன தேரர் ஆகியோரின் கையொப்பத்துடன் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்திற்கு முரணாக செயற்படுவதாகவும், ஆணைக்குழு உறுப்பினர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளுக்கு செவிசாய்க்காமல் தனது தனிப்பட்ட விருப்பத்திற்கு அமைய செயற்படுவதாகவும் அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை தலைவர் தொடர்ந்து புறக்கணித்ததால், கடந்த பெப்ரவரி மாதம் ஆணைக்குழுவின் முன்மொழிவுகளுக்கு உறுப்பினர்கள் அங்கீகாரம் வழங்கவில்லை என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பேச்சை தலைவர் கேட்காததால், இந்த மூன்று உறுப்பினர்களும் அவரது எந்த முடிவையும் அங்கீகரிக்க வேண்டாம் என்றும் இது தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தலைவர் உட்பட 5 பேர் அங்கம் வகிக்கின்றனர். அவர்களில் மூவர் தமது கையொப்பத்துடன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் அரசின் முடிவுகளை எதிர்த்த இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராகவும் இதே போன்ற நிலைமை உருவாகியிருந்தது.

அதேபோல் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சிலரை பதவி விலகுமாறு மிரட்டி ஏற்கனவே மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

ஆணைக்குழுவில் இருந்து இராஜினாமா செய்யாவிட்டால் கொலைசெய்யப் போவதாக உறுப்பினர்களான கே.பி.பி. பத்திரண, மொஹம்மட் மற்றும் எஸ்.பி.திவரத்னவுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்ததையடுத்து, அந்த இரு உறுப்பினர்களின் வீடுகளுக்கும் ஆயுதம் தாங்கிய பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கடந்த மார்ச் 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் கொழும்பு மற்றும் களனிப் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை அடக்குவதற்காக, 'பொலிஸார் செயற்பட்ட விதம் குறித்து விசாரணை நடத்துவதற்கு' அமைச்சர் டிரான் அலஸை அழைத்த மனித உரிமைகள் ஆணைக்குழு, நான்கு நாட்களுக்குப் பின்னர் அது அழைப்பாணை அல்ல,'விளக்கத்திற்கான கோரிக்கை' என்று தெரிவித்திருந்தது.

அதேபோல், க.பொ.த. உயர்தரப் பரீட்சையின்போது மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டமை தொடர்பாக விடுக்கப்பட்ட அழைப்பாணையைத் தொடர்ந்து மின்சக்தி அமைச்சின் மூன்று அதிகாரிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அப்போது, அமைச்சு அதிகாரிகள் ஆவணங்களில் கையொப்பமிட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வற்புறுத்தப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு சுயாதீனமாக முடிவொன்றை எடுக்கவோ, தீர்மானமொன்றை அமுல்படுத்தவோ சுதந்திரமற்று இருக்கின்றதென்பது மேற்படி இரண்டு சம்பவங்களிலும் தெளிவாக தெரியவந்தது. இறுதிவரை டிரான் அலஸ் ஆணைக்குழுவுக்கு செல்லவுமில்லை. மின்சக்தி அமைச்சின் அதிகாரிகளுக்கு எதிராக சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவுமில்லை.

இப்போது நடக்கும் விடயங்களை நிதானமாக ஆராய்ந்து பார்த்தால், அரசியல் தலையீடுகள் காரணமாகவே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கருத்து முரண்பாடு ஏற்படும் நிலைமை உருவாகியுள்ளதை இலகுவாக கணித்து விடலாம். அரசியல்வாதிகளுக்கு ஏற்றபடி நடப்பதாக இருந்தால் அங்கே எப்படி மக்களின் அடிப்படை உரிமைகள் நிலைநாட்டப்படும் என்ற சாதாரண கேள்வி இயல்பாகவே எழுகிறது.

போராட்டங்களை ஒடுக்கும் அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக கிளம்பியுள்ள எதிர்ப்பின் பின்னணியில் அரசியல் துர்நாற்றம் வீசுவது அப்பட்டமாகவே தெரிகிறது. மறுபுறம் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர் மனித உரிமைகளை மதிக்காமல் இருக்கிறார் என்று குற்றம் சுமத்துவதன்மூலம் இலங்கையின் நீதித்துறை மீதான சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாகிறது. ஆணைக்குழுவின் தலைவராக இருப்பவர் அநீதியாக செயற்படுகிறார் எனில் அவர் நீதிபதியாக இருந்த காலத்தில் நீதியாக எவ்வாறு செயற்பட்டிருப்பார் என்ற கேள்வியும் அங்கே தொக்கி நிற்கின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக நிற்கிறார்கள் என்று கூறி வானத்தை நோக்கி உமிழ்ந்து கொண்டிருப்பதாகவே தெரிகிறது. சுயாதீன ஆணைக்குழுக்களை சுயாதீனமாக இயங்க முடியாத நிலைக்கு தள்ளியிருக்கும் இந்த அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் இப்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மீதே தங்களது ஆதிக்கத்தைக் காட்ட ஆரம்பித்துள்ளனர். இது ஆரோக்கியமானதல்ல. நீதி, நியாயம் பற்றி ஊருக்கும் உலகுக்கும் வகுப்பெடுக்கும் ரணில் இதனை கவனிப்பாரா?

# வாங்க, வயிறார சாப்பிட்டுப் போங்க...



## மக்கள் மனதைக் கவரும் மனிதநேய உணவகம்

நெடுஞ்சாலைகளில் பயணித்தவர்களுக்கு பல அனுபவங்கள் இருக்கும். குறிப்பாக உணவு விடயத்தில் உணர்வுபூர்வமான சில அனுபவங்கள் உண்டு.

வீதியோரங்களில் பல உணவகங்கள் கை நீட்டி அழைப்பது போல் இருக்கும். ஹோட்டல்களின் முன்பு காவலாளிகள் நின்று கொண்டு கையில் ஒரு கொடியும், வாயில் ஒரு விசிலும் வைத்துக் கொண்டிருப்பார்கள்.

வீதியில் செல்பவர்களை பார்த்ததும்



கொடியை அசைத்தும், விசிலை ஊதியும் வாங்க சாப்பிடலாம் என்று சைகையால் அழைப்பார்கள். கார்களில் சொகுசாக செல்பவர்கள் கடைகளை பார்த்து வாகனங்களை நிறுத்திவிட்டு சாப்பிட சென்று விடுவார்கள். அவர்களை பொறுத்தவரை எந்த பிரச்சினையும் இல்லை.

அதேநேரம் இரு சக்கர வாகனங்களிலும், சைக்கிள்களிலும், ஏன் லொறிகளில் கூட பயணிக்கும் நடுத்தர வர்க்கத்தினரும் ஏழைகளும், தொழிலாளிகளும் அந்த உணவகங்களை பார்த்தால் அருகில் செல்லவே கூச்சப்படுவார்கள். அதற்கு காரணம் அது வசதி படைத்தவர்கள் மட்டுமே சாப்பிட முடியும். அங்கு பரிமாறப்படும் உணவுகளை பெயர் சொல்லிக் கேட்கக்கூட பலருக்கு தெரியாது. அதைவிட முக்கியமாக பெரிய ஹோட்டல்களுக்கு சென்றால் நம்மிடம் இருக்கும் பணம் போதாதே என்ற தயக்கமும் அவர்களின் கால்களை அந்த பக்கமாக நடக்கவிடாது.

அதே சாலையில்தான் வாருங்கள்... வயிறாற சாப்பிடுங்கள்... காசைப்பற்றி கவலை இல்லை. உங்களால் முடிந்தால் முடிந்த அளவு உண்டியலில் காசை போடுங்கள். காசில்லையா வயிறாற சாப்பிட்டு விட்டு செல்லுங்கள்.

இப்படி ஒரு ஹோட்டல் இருந்தால் எப்படி இருக்கும். இந்தக்காலத்தில் இப்படி ஒரு ஹோட்டல் நடத்துவதற்கு அவனுக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு என்றுதான் கேட்க தோன்றும். ஆனால் உண்மையிலேயே இப்படியும் ஒரு ஹோட்டல் செயல்படுகிறது.

தமிழ்நாட்டில் பாண்டிச்சேரி-திண்டிவனம் நெடுஞ்சாலையில் திண்டிவனத்தில் இருந்து 4 கி.மீ. தொலைவில் ரோட்டோரத்தில் மனித நேயம் உணவகம் என்ற பெயர்ப் பலகையுடன் அந்த ஹோட்டல் காட்சியளிக்கிறது. ஹோட்டல் என்றவுடன் பெரியஹோட்டல் களில் பார்ப்பதை போல் சொகுசான இருக்கைகள், சுழன்று வீசும் மின்விசிறிகள், குளிர்ச்சியை அள்ளி தெறிக்கும் குளிரூட்டிகள் அதெல்லாம் கிடையாது.

4 மரக்குச்சிகளை ஊன்றி மேலே 4 தகர கொட்டைகளை போட்டு கீழே அமர்ந்து சாப்பிட சில நாற்காலிகளை போட்டு வைத்திருக்கிறார்கள்.

காலை 7 மணிக்கு சென்றால் மல்லிகைப்பூ போன்ற ஆவி பறக்கும் இட்லி, பொங்கல், வடை மூன்றும் கிடைக்கும். இதில் இதைத்தான் சாப்பிட வேண்டும். இவ்வளவு சாப்பிட வேண்டும் என்று அளவெல்லாம் கிடையாது. அங்கு இளைஞர் ஒருவர் பரிமாறி கொண்டிருப்பார். எவ்வளவு இட்லி வேண்டுமானாலும் சாப்பிட்டுக்கொள்ளலாம். எவ்வளவு பொங்கல் வேண்டுமானாலும் சாப்பிட்டுக்கொள்ளலாம். உங்கள் வயிறு கொள்ள வேண்டும் அவ்வளவுதான். பசி ஆறியதும் கையை கழுவிவிட்டு தம்பி பில் எவ்வளவு என்று கேட்டால் அந்த இளைஞர் சிரிக்கிறார்.

கட்டணம் எல்லாம் எதுவும் கிடையாதுங்க... உங்கள் விருப்பம் தான். உங்களால் எவ்வளவு கொடுக்க முடியுமோ அதை அதோ இருக்கும் அந்த உண்டியலில் போடுங்கள். பணம் இல்லையென்றாலும் கவலை படாதீங்க. வயிறு நிறைந்தால் போதும் பசி ஆறி சந்தோஷமாக செல்லுங்கள் என்கிறார்.

பசி ஆறியவர்கள் ஆச்சரியத்துடன் மவராசனாக வாழ்வாயப்பா என்று வாயாரா வாழ்த்தி செல்கிறார்கள் அந்த பூவரசனை.

இப்படி ஒரு வித்தியாசமான ஹோட்டலை நடத்தும் அந்த வாலிபரின் பெயர் பூவரசன். 26 வயதாகும் இந்த இளைஞருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.
குடும்பமும் ஜமீன்தார் குடும்பம் அல்ல. பெற்றோர் கூலி வேலைக்கு சென்றால்தான் வீட்டில் சாப்பாடு கிடைக்கும் என்ற நிலைதான். உடன் பிறந்த 4 பேருக்கும் திருமணம் ஆகிவிட்டது.

பூவரசன் டிப்ளமோ படித்து முடித்து இருக்கிறார். அவருக்கு மட்டும் இப்படி ஒரு வித்தியாசமான ஆசை. அதுவும் சாமானியர்களின் பசிப் பிணியைப் போக்கும் ஆசை. உண்மையான இந்த மனித நேயத்தால்தான் அந்த உணவகமும் மனித நேயம் என்ற பெயரில் செயல்படுகிறது.

பூவரசனுக்கு இப்படி ஒரு புது எண்ணம் உருவானது எப்படி? என்பது சுவாரஸ்யமானது. சினிமாவை பார்த்து திருடுபவர்களும் இருக்கிறார்கள். திருந்துபவர்களும் இருக்கிறார்கள். சேவை செய்பவர்களும் இருக்கிறார்கள் என்பதற்கு இந்த பூவரசனும் ஒரு சாட்சி.

கூட்டத்தில் ஒருவன் என்ற சினிமா பார்க்க சென்றுள்ளார். அந்தப் படத்தில் வேலை இல்லாத பட்டதாரியாக கதாநாயகன் இருக்கிறார். வேலை தேடி அலைகிறார். ரூ.6 ஆயிரம், ரூ.7 ஆயிரம் சம்பளத்தில் வேலை கிடைக்கிறது. அந்த சம்பளத்தை கொண்டு எதுவும் செய்ய முடியாமல் தவித்து போகிறார்.

காதலித்து அதிலும் தோல்வியை தழுவுகிறார். வீட்டிலும் மரியாதை இல்லை. சமூகத்திலும் மரியாதை இல்லை என்ற நிலையில், இல்லாதவருக்கு உதவி செய்யலாமே என்ற உணர்வோடு அமுதசுரபி என்ற உணவகத்தை தொடங்குவார். அதில்தான் உணவின் விலை உங்கள் விருப்பம். பணம் இல்லையென்றாலும் பசியாறலாம் என்ற பெயரோடு உணவகத்தை தொடங்கி நடத்துவார். அது விரிவடைந்து மிகப்பெரிய அளவில் பெயர் பெறும். அந்த தாக்கம்தான் பூவரசனின் இதயத்திலும் பதிந்து இருக்கிறது. ஏற்கனவே வேலை இல்லாமல் தவித்து கொண்டிருந்த பூவரசன் தானும் அந்தப் படத்தில் வருவதை போல உணவகம் ஒன்றை தொடங்கினால் என்ன என்று நினைத்திருக்கிறார்.

ஆனால், உணவகம் தொடங்குவது என்றால் சாதாரண விடயமா? அவர் சம்பாதித்த ரூ.70 ஆயிரம் பணத்தில் (இந்திய ரூபா)கிரைண்டர் மற்றும் நாற்காலிகள், சமையலுக்கான பாத்திரங்கள் ஆகியவற்றை வாங்கியிருக்கிறார். பொருட்கள் தயார். சமைப்பதற்கு யாரை அழைப்பது?

பூவரசனின் செயலை வீட்டில் யார்தான் ஆதரிப்பார்கள்? வியாமாரமாகத் தொடங்கினால் நிச்சயம் ஊக்கமளிப்பார்கள். இது தான் வியாபாரம் இல்லையே... எப்படி ஆதரிப்பார்கள்? இருந்தாலும் தளராமல் தனது திட்டத்துக்கு அம்மாவை உதவிக்கு அழைத்து இருக்கிறார். என்னதான் இருந்தாலும் பெற்ற வளாச்சே! பிள்ளையின் சந்தோஷம்தானே அவருக்கும் சந்தோஷம். எனவே, மகனின் மகிழ்ச்சிக்காக அவரே சமையல் செய்து தருவதாக கூறி இருக்கிறார். காலையில் இட்லி, பொங்கல், வடை, சட்னி, சாம்பார். மதியம் தக்காளி சாதம், தயிர் சாதம், சாம்பார் சாதம். மதிய சாப்பாடு மட்டும் என்று மெனு மாறிக்கொண்டே இருக்குமாம். இதுபற்றி பூவரசன் கூறியதாவது:-

படத்தை பார்த்து அதேபோல் நாமும் ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு ஆசையில் ஆரம்பித்து விட்டேன். ஆரம்பத்தில் 10 பேர் 15 பேர் சாப்பிட்டார்கள். தொடர்ந்து நம்மால் இதை நடத்த முடியுமா என்ற தயக்கமும் வந்தது. ஒரு கட்டத்தில் விட்டு விடலாம் என்ற முடிவுக்கும் வந்தேன்.
ஆனால், மறுநாள் சாப்பாட்டுக்கு யார் மூலமாவது உதவி கிடைக்கும். அப்புறம் மறுநாளும் சமைக்க தொடங்குவேன். இதேபோல் விட முடியாத அளவுக்கு உதவிகள் வந்ததும் தொடர்ந்து நடத்த தொடங்கினேன்.

8 மாதங்கள் உருண்டோடி விட்டன. இப்போது தினமும் சராசரியாக 100 பேர் சாப்பிடுகிறார்கள். வீதியில் குப்பை பொறுக்குபவராக இருந்தாலும் சரி, தொழிலாளர்கள், மாணவர்கள் என்று யாராக இருந்தாலும் இங்கு வந்து பசியாறலாம். அவர்கள் பசியாறிவிட்டு கையில் இருக்கும் 5 ரூபாய், 10 ரூபாவை உண்டியலில் போடுவதும் உண்டு.

காசே இல்லாமல் இருப்பவர்கள் சாப்பிட்டு விட்டு தயங்கும் போது நானே சொல்வேன் ''எதைப் பற்றியும் யோசிக்காதீர்கள். நன்றாக சாப்பிட்டு விட்டீர்களா..? போய் வாருங்கள்'' என்று அனுப்பி விடுவேன்.

அதே நேரம் சமூகத்தில் இந்த மாதிரி உதவிகள் மனிதநேயத்தோடு செய்யும்போது, அதே மனித நேயத்தோடு உதவுவதற்கும் பலர் இருக்கிறார்கள் என்பதையும் அனுபவபூர்வமாக பார்த்து வருகிறேன். ஆனால், நாம் செய்வது மற்றவர்களுக்கு சரியாகப் போய் சேருமா என்பதற்காக பலர் செய்யவும் தயங்குகிறார்கள்.

அப்படித்தான் ஒருநாள் காரில் ஒருவர் வந்தார். கடை முன்பு காரை நிறுத்திவிட்டு ''இட்லி என்ன விலை?'' என்று கேட்டார். நாங்கள் அவரிடம் ''ஐயா.. விலை எதுவும் வைக்கவில்லை. சாப்பிட்டுவிட்டு செல்லலாம். விருப்பம் போல் ரூபா கொடுக்கலாம்'' என்ற தகவலை சொன்னேன். அதை கேட்டதும் அவர் எந்த உணர்வையும் காட்டவில்லை. ஆனால், சாப்பிடாமலேயே திரும்பிவிட்டார். எனக்கும் என்னவென்று புரியவில்லை.

திரும்பி சென்றவர் சிறிது நேரத்தில் மீண்டும் வந்தார். தனது காரில் இருந்து 8 மூட்டை அரிசி பைகளை இறக்கி வைத்து விட்டு ''இதையும் சமைத்து கொடுங்கள்'' என்று சொல்லிவிட்டு சென்றார். பெயரை கேட்டதும், ''அதெல்லாம் உனக்கு எதற்கு தம்பி?'' என்று சொல்லிவிட்டு சென்று விட்டார்.

இதேபோல் ஒருவர் இருவர் அல்ல. பலர் பலவிதமான உதவிகளை செய்கிறார்கள். ஒரு நாள் ஒருவர் சுமார் 10 கிலோவுக்கும் மேல் காய்கறிகள் இருக்கும். அதை வாங்கி என் கடையின் முன்பு வைத்துவிட்டு சற்று தூரம் தள்ளி போய் நின்று என்னை தொலைபேசியில் அழைத்தார். ''தம்பி, கடையின் முன்பு கொஞ்சம் காய்கறி வைத்திருக்கிறேன்'' என்றார். அவரிடமும் கேட்டபோது பெயர் விபரங்கள் எதையும் சொல்ல மறுத்துவிட்டார்.

மிக சாதாரணமான சிலர் தங்கள் பிறந்த நாளையொட்டி ரூ.100 முதல் ரூ.500 வரை கொடுத்து முடிந்தவரை இதற்கு சமையல் செய்து கொடுங்கள் என்று சொல்லிவிட்டு செல்கிறார்கள் என்றவர் காலை 7 மணியில் இருந்து 9 மணி வரைகாலை சிற்றுண்டியை சாப்பிட்டு கொள்ளலாம். மதியம் 12 மணியில் இருந்து 2 மணி வரை மதிய சாப்பாடு சாப்பிட்டுக் கொள்ளலாம் என்றார் சிரித்துக்கொண்டே.

இளைஞர்களில் இவர் வித்தியாசமானவர். இவர் பூவுக்கு அரசன் அல்ல. பூமிக்கு அரசன் என்பதே சரியாக இருக்கும். நாட்டை ஆளும் அரசன் தன் நாட்டில் உள்ள மக்கள் பசி இல்லாமல் வாழ வேண்டும் என்று நினைப்பான். இவரும் அப்படியே பசி இல்லாத ஒரு சமூகம் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த பணியை செய்து வருகிறார். ''வயிற்றுக்கு சோறிட வேண்டும். இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்'' என்று சமூகத்தை பார்த்து அக்கறையோடு பாடிய பாரதியின் கனவு ஆங்காங்கே ஏதோ ஒரு வடிவத்தில் நனவாகிக் கொண்டேதான் இருக்கிறது.

**( இந்தக் கட்டுரையில் வரும் ரூபா என்பது இந்திய ரூபா பண மதிப்பாகும்.)**

**நன்றி - மாலை மலர்**

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1656 – இலங்கையின் டச்சுத் தளபதி ஜெரார்ட் பீட்டர்ஸ் அல்ஃப்ட் கொழும்பு நகரில் இடம்பெற்ற சண்டையில் கொல்லப்பட்டார். ஒரு மாதத்தின் பின்னர் கொழும்பு டச்சுகளிடம் வீழ்ந்தது.
- 1658 – ஊர்காவற்றுறைக் கோட்டை டச்சுகளினால் கைப்பற்றப்பட்டது.
- 1912 – டைட்டானிக் பயணிகள் கப்பல் தனது முதலாவதும் கடைசியுமான பயணத்தை இங்கிலாந்தின் சௌதாம்டன் துறையில் ஆரம்பித்தது.
- 1984 – ஈழப்போர்: பருத்தித்துறை பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டது.
- 1985 – ஈழப்போர்: யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டது.

2002 – விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கிளிநொச்சியில் சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டார்.

# இப்பலோகம பகுதியில் பெண்ணொருவர் ஆயுதமொன்றினால் அடித்துக் கொலை

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் இப்பலோகம பொலிஸ் பிரிவிலுள்ள ஹிரிப்பிட்டியாகம பகுதியில் பெண் ஒருவரை ஆயுதம் ஒன்றினால் தலையில் அடித்துக்கொலை செய்துள்ளதாக கிடைத்த தகவலுக்கு அமைய இப்பலோகம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (08) இப்பலோகம ஹிரிப்பிட்டியாகம பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

46 வயதுடைய இப்பலோகம ஹிரிப்பிட்டியாகம பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட பெண் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.


சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கணவனும் மனைவியும் சிறிது காலம் தற்காலிகமாக பிரிந்திருந்த நிலையில், நேற்று முன்தினம் (08) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

நீதவான் விசாரணைகளின் பின்னர் பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக வேண்டி சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப் பட்டுள்ளது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியுள்ள நிலையில், அவரை கைதுசெய்வதற்காக இப்பலோகம பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் பல கோணங்களிலும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் பிழையிருப்பதாக கருதவில்லை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு





நாட்டில் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இன்று அந்த நிலைமை இல்லை. எமது நாட்டை நிர்வகிக்க சட்டங்கள் தேவை. அந்தவகையில் இது புதிதல்ல. சட்டத்தில் பிழையிருப்பதாக நான் கருதவில்லையென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மட்டக்களப்பு தலைமையகத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆளுங்கட்சிகள் ஏதாவதொரு முறையில் எதிர்க்கட்சிகளை எதிர்ப்பதுதான் பொதுவான யதார்த்தம். அந்த வகையில் எதிர்க்கட்சிகள் பல்வேறு கருத்துகளைக் கூறிக் கொண்டிருக்கின்றன. தவிர சட்டத்தில் பிழையிருப்பதாக நான் கருதவில்லை. சட்டம் ஏற்கனவே அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதைப் பற்றி எமது கட்சி ஆராய்ந்து கொண்டிருக்கிறது. பாராளுமன்றத்திற்கு இச்சட்டம் கொண்டு வரப்படும்போது எமது கருத்தைச் சொல்வோம்.

நீண்டகாலமாக தமிழர் பிரச்சினைகளுக்கு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகள் ஊடாகத்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என நீண்டகாலமாகக் கூறி வந்திருக்கிறேன்.

இந்நிலையில் அன்று சக தமிழ்க் கட்சிகள் இதை எதிர்த்தன. இன்று அக்கட்சிகளும் இதற்கு ஆதரவாக இருக்கிறார்கள். அந்தவகையில் ஜனாதிபதி அதை ஏற்கனவே விளங்கிக் கொண்டுள்ளனர். எனவே அது வரவேற்கக் கூடியது.

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயப் பிரச்சினையில் நடந்திருப்பது தவறு. யார் செய்திருந்தாலும், பிழையே. எது எவ்வாறாயினும் அங்கு விரைவில் சிலைகள் நிறுவப்படும். இதற்கு ஆளுநரின் அனுமதியோ, பிரதமரின் அனுமதியோ பெறத் தேவையில்லை. நாம் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டதாகப் பொய்யான செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்திய இழுவைப்படகுப் பிரச்சினை மிக நீண்ட காலமாக தொடர்ந்தவண்ணமுள்ளன. விடுதலைப் போராட்ட காலத்தில் தமது நலன்களுக்காக விடுதலைப் புலிகள் இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தனர். இந்நிலையில் இன்றைக்கு நாங்கள் அதனைக் கட்டுப்படுத்துகிறோம்.

அந்தவகையில் இலங்கை மீனவர்களின் நலன்களைப் பாதிக்கும் வகையில் அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருக்கிறார்.

கடற்றொழிலில் சட்டங்களை மீறும்போது நடவடிக்கை எடுக்கப்படும்.


மீன்பிடித் தொழில் மட்டக்களப்பில் உரியவாறு முன்னெடுக்கப்படுகிறது. இதன் மூலமாகப் பெறப்படும் மீன்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நிலையில் பல தடைகள் காணப்படுவதாகவும், அவற்றை நிவர்த்தி செய்து தருமாறும் மீனவர்கள் கலந்துரையாடலின்போது தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை துறைமுகத்தினை விஸ்தரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதேபோன்று ஒலுவில் துறைமுகம் மீண்டும் இயக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஒலுவில் துறைமுகம் திறக்கப்படுமானால் வாழைச்சேனையில் தரிக்கப்படும் அம்பாறை மாவட்ட படகுகள் வராது. அதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்னும் அதிகளவான படகுகளை தரிக்கமுடியும்.

தற்போதுதான் நாடு ஓரளவு முன்னேற்றம் அடைந்துவருகின்றது. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றதன் பின்னர் பல்வேறுவிதமான வளர்ச்சிகளை காணமுடிகின்றது. எனினும், அடுத்த ஆண்டுகள்தான் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கமுடியும்.

மட்டக்களப்பு வாவியில் மீன்பிடித் தொழிலை வளர்ப்பதன் ஊடாக எவ்வாறு சுற்றுலாவை வளப்படுத்தலாம் எனவும், அதனூடாக நாட்டுக்கு வருவாயை எவ்வாறு பெறலாம் எனவும் கலந்தாலோசிக்கப்பட்டது என்றார்.

# இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலய உயிர்த்த ஞாயிறு தின விசேட வழிபாடுகள்





வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் உயிர்த்த ஞாயிறு விசேட வழிபாடுகள் வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் அமைதியான முறையில் இடம்பெற்றன.

பேராலயத்தில் நேற்று முன்தினம் 12 மணிக்கு ஆலய விளக்குகள் அணைக்கப்பட்டு, புது தீமூட்டி மெழுகுவர்த்தி ஏற்றி உயிர்த்த ஞாயிறு வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

வவுனியா பங்குத்தந்தை அருமபணி தேவராஜ கொடிதோர் ஆண்டகை தலைமையில் பங்குத்தந்தையர்களினால் உயிர்த்த ஞாயிறு விசேட வழிபாடுகள் நடத்தப்பட்டன.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் அமைதியான முறையில் உயிர்த்த ஞாயிறு வழிபாடுகள் இடம்பெற்றன.

# சட்டவிரோத உண்டியல் பணப்பரிமாற்றத்தில் 82 இலட்ச ரூபாவை பெற்ற இருவர் கைது



சட்டவிரோத உண்டியல் பணப்பரிமாற்ற முறையின் மூலம் 82 இலட்ச ரூபாவை பெற்றதாகக் கூறப்படும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - டேம் வீதியில் வைத்து இந்த இரண்டு சந்தேகநபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

வத்தளையைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரும், வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக வாழைத்தோட்டம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# மோட்டார் சைக்கிள் ரயர் வெடித்து விபத்து

## மூன்று பிள்ளைகளின் தாய் உயிரிழப்பு

சிலாபம் இரணைவில வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளின் ரயர் வெடித்து விபத்துக்குள்ளானதில் மூன்று பிள்ளைகளின் தாய் உயிரிழந்துள்ளதுடன் அவரது இரண்டு பிள்ளைகளும் அவரது கணவரும் படுகாயமடைந்து சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹலாவத்தை தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


சிலாபம் மெதவத்தை பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயே விபத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த பெண் தனது 10 மற்றும் 13 வயதுடைய இரண்டு பிள்ளைகளுடன் இரணைவில கடற்கரை வீதியிலிருந்து சிலாபம் நோக்கி தனது கணவர் ஓட்டிச்சென்ற மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது மோட்டார் சைக்கிளின் பின் சக்கரம் திடீரென வெடித்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து இரண்டு பிள்ளைகளும் கணவனும் வீதியை விட்டு தூக்கி வீசப்பட்ட நிலையில், பெண் நடுவீதியில் வீழ்ந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்ட சிலாபம் தலைமையக பொலிஸாரின் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நடு வீதியில் தூக்கி வீசப்பட்ட பெண் பின்னால் வந்த சிறிய ரக லொறி மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

# புகையிரதத்தில் திருட்டுத்தனமாக பயணிப்போர் எண்ணிக்கை அதிகரிப்பு



பயணச்சீட்டின்றி ரயிலில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பஸ் பயணக் கட்டணத்தைவிட குறைவான கட்டணம் வசூலிக்கப்படும் ரயில் சேவையின் மூலம் பயண வசதி பெறும் பயணிகள் இவ்வாறு பயணச்சீட்டின்றி பயணம் செய்கின்றமையால் திணைக்களத்தின் வருமானம் மேலும் குறையுமென புகையிரதத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்நிலையில், பயணச் சீட்டு இல்லாமல் ரயிலில் பயணம் செய்யும் பயணிகளிடம் அறவிடப்படும் அபராதத்தை உயர்த்துவது குறித்து புகையிரத திணைக்களம் கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது இவ்வாறு பயணிக்கும் பயணிகளிடமிருந்து இருமடங்கு பயணச்சீட்டு கட்டணமும், மூவாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், அபராதத் தொகை 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட வேண்டும் என புகையிரதத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

பயணச்சீட்டு பரிசோதகர்கள் இல்லாததால் ரயிலில் பயணச்சீட்டின்றி பயணிக்கும் பயணிகளை சோதனை செய்யும் நடவடிக்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது புகையிரதத் திணைக்களத்துக்கு மாதாந்தம் ஆயிரத்து 300 இலட்ச ரூபா வருமானம் கிடைப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# 805 இலட்ச ரூபா நிதியைப் பயன்படுத்தி சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு ஏற்பாடு

## சமுர்த்தி தொழிற்சங்க ஒன்றியம் எதிர்ப்பு

சமுர்த்தி நிதியத்தின் 805 இலட்ச ரூபா நிதியை பயன்படுத்தி நாடளாவிய ரீதியாக உள்ள ஆயிரத்து 74 சமுர்த்தி வங்கிகளில் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வை நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்துக்கு சமுர்த்தி தொழிற்சங்க ஒன்றியம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் புத்தாண்டு விழாக்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

எனினும், மக்கள் எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான ஏற்பாடுகளுக்கு தாங்கள் எதிர்ப்பை வெளியிடுவதாக சமுர்த்தி தொழிற்சங்க ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் சாமர மத்துமகளுகே தெரிவித்துள்ளார்.

தங்களது எதிர்ப்பை வெளியிடும் வகையில் எதிர்வரும் 15ஆம் திகதி சமுர்த்தி வங்கிகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சூடான செய்திகளுக்கு உடன் இணைந்திருங்கள்
thamilan.lk

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.04.08
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5084 | ரூ. 13.182.459.00 | Z | 7 2 5 8 6 6 |
| கொவிசெத | 3326 | ரூ. 95,291,264.64 | C | 23 35 53 78 |
| ஜாதிக சம்பத | 1539 | ரூ. 11,920,089.20 | மிதுனம் | 7 6 2 5 5 1 |
| தன நிதானய | 1113 | ரூ. 85,304,720.00 | L | 04 18 24 43 |
| ராசி சுப பலன் (Handahana) | 393 | ரூ. 2,909,101.60 | துலாம் (விசேட இலக்கினம்: துலாம்) | 15 27 47 48 |
| மெகா பவர் | 1432 | ரூ. 313,881,638.00 | D (சுப்பர் இலக்கம் 01) | 11 19 30 40 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.04.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5083 | ரூ. 11,992,520.00 | O | 0 6 4 1 7 8 |
| கொவிசெத | 3325 | ரூ. 94,887,103.44 | G | 12 65 68 76 |
| ஜாதிக சம்பத | 1538 | ரூ. 11,861,451.20 | | 5 2 2 5 2 7 |
| தன நிதானய | 1113 | ரூ. 85,304,720.00 | L | 04 18 24 43 |
| ராசி சுப பலன் (Handahana) | 392 | ரூ. 2,899,074.80 | மகரம் (விசேட இலக்கினம்: மகரம்) | 21 27 34 50 |
| மெகா பவர் | 1431 | ரூ. 313,584,022.00 | L (சுப்பர் இலக்கம் 15) | 14 23 71 76 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2023 ஏப்ரல் மாதம் 28 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ. பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது

தங்க கடன் பிரிவு
வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்

# 14 வயதுச் சிறுமி கூட்டு வன்புணர்வு; சந்தேகத்தின்பேரில் நால்வர் கைது!

(யாழ். நிருபர்)

14 வயதுச் சிறுமியை கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் நால்வர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொருவர் ஏற்கனவே போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் மறியலில் வைக்கப்பட்டுள் ளார் என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணப் புறநகர்ப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமியும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் அதே இடத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிய 19 வயது முதல் 26 வயதுக்குட்பட்டவர்களே 14 வயதுச் சிறுமியை தொடர்ச்சியாக கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தியமை கடந்த வெள்ளிக்கிழமை (07) பாதிக்கப்பட்ட சிறுமி வழங்கிய தகவலின் அடிப்படையில் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் வேலைக்குச் சென்றிருந்த வேளைகளிலேயே சந்தேக நபர்கள் இந்தச் செயலை செய்துள்ளனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் சந்தேக நபர்களும் மருத்துவப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

# யாழ். சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென நூலகம் திறந்துவைப்பு







(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென நூலகமொன்று அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் (08) சனிக்கிழமை காலை 09.30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜாவால் நூலகம் திறந்துவைக்கப்பட்டது. யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் நூலகர் ஸ்ரீகாந்தலக்சுமி அருளானந்தம் சிவநேசன் குடும்பத்தினரால் சம்பிரதாயபூர்வமாக நூல்கள் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகரிடம் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் கே.பி.ஏ.உதயகுமார, பிரதான ஜெயிலர் எச்.எம்.டி.ஹேரத், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சா.சுதர்சன் உள்ளிட்ட சிறை அதிகாரிகளும், சிறைக்கைதிகளும் கலந்துகொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் ஸ்ரீகாந்தலக்சுமி அருளானந்தம் சிவநேசன் குடும்பம் மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்புடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தினர் இந்தச் சிறைச்சாலை நூலகத்தை உருவாக்கியுள்ளனர். இந்நூலகம் தொடர்ச்சியாக இயங்குவதற்கான முழுமையான பங்களிப்பையும், பராமரிப்பு, ஆலோசனைகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் வழங்கவுள்ளது.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# யாழில் இடம்பெற்ற 'குவியம் மொபைல் குறும்படப் போட்டி 2023'இன் விருது வழங்கல் நிகழ்வு








(யாழ். நிருபர்)

"குவியம் மொபைல் குறும்படப்போட்டி 2023" இன் விருது வழங்கல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

"உயிரைக்கொல்லும் போதைப்பொருள்" என்ற கருப்பொருளில் நடத்தப்பட்ட இந்தக் குறும்படப்போட்டிக்கு நாடளாவிய ரீதியிலிருந்து 63 குறும்படங்கள் கிடைக்கப்பெற்றன.

அவற்றில் சிறந்த 10 குறும்படங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அதன் இயக்குனர்கள் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் இயக்குனர் கவிவர்மனின் 'யாவரும் கேளீர்' குறும்படம் முதலாவது இடத்தையும், இயக்குனர் கெனிஸ்டன் ஜோனின் '30 செக்கன்' குறும்படம் இரண்டாம் இடத்தையும், இயக்குனர் கே.கோடீஸ்வரனின் 'வசம்' குறும்படம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

அவர்களுக்கான விருதுகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் வழங்கினார்.

முதல் 03 இடங்களையும் பெற்ற குறும்படங்கள் விருது விழாவில் திரையிடப்பட்டு அது தொடர்பிலான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு திருப்பலி



(மன்னார் நகர் நிருபர்)

உயிர்த்த ஞாயிறு திருப்பலி மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று முன்தினம் (08) சனிக்கிழமை இரவு 11.15 மணிக்கு இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலி இடம்பெற்றபோது ஆலயத்தைச் சூழ இராணுவம் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. மன்னார் மறை மாவட்டத்திலுள்ள பல்வேறு ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி இடம்பெற்றதோடு, தேவாலயங்களுக்கு பலத்த பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலையும் திருவிழா திருப்பலி ஆலயங்களில் ஒப்புக்கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





## வரட்சி காரணமாக குடிநீருக்குத் தட்டுப்பாடு

# குண்டசாலையிலிருந்து நீரைப்பெறும் 30 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு



(கண்டி செய்தியாளர்)

குண்டசாலை நீர் விநியோகத்திட்டம் மூலம் நீரைப் பெறும் சுமார் 30 ஆயிரம் குடும்பங்கள் தண்ணீரின்றி பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

கண்டி குண்டசாலை நீர் விநியோகத்திட்டத்திற்கு மகாவலி கங்கையில் இருந்தே நீர் வழங்கப்படுகிறது. ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக மகாவலி ஆற்றில் நீர் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.

ஆற்றின் தரைப் பகுதி வறண்டு காணப்படுவகிறது. இதனால் குண்டசாலை நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் நீரைப் பெற்றுக்கொள்ளும் சுமார் 30 ஆயிரம் குடும்பங்கள் கடும் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மகாவலி ஆற்றின் ஊடாக விக்டோரியா நீர்த்தேக்கத்தை நோக்கிச் செல்லும் நீர் பல்லேகல பிரதேசத்தில் இடைமறித்து சுத்திகரிப்பு செய்யப்பட்டே குண்டசாலை, பலகொல்ல, திகன, வாரபிட்டிய உள்ளிட்ட சுற்றுப்புற கிராமங்களுக்கு நீர் விநியோகிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், மகாவலி கங்கையின் நீர் வெகுவாகக் குறைந்துள்ளதாலும், சில பகுதிகளில் தொடர்ச்சியாக ஐந்தாறு நாட்களுக்கு நீர் நிறுத்தப்படும் அளவிற்கு குடிநீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல்லேகல முதலீட்டு வலயம், மத்திய மாகாண சபை வளாகம், தும்பற திறந்தவெளி சிறைச்சாலை, ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் அங்குள்ள முக்கிய இடங்கள் உட்பட பல அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு குண்டசாலை நீர் விநியோகத்திட்டம் மூலம் நீர் விநியோகிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதேச மக்கள், பலகொல்லயில் மட்டும் 1,500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும், தொடர்ந்து ஐந்து நாட்களாக தண்ணீர் விநியோகிக்கப்படாத காரணத்தால் தாம் சிரமத்திற்கு ஆளாகியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

நோன்புக் காலத்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக மிகவும் பாதிப்படைந்துள்ளதாக அங்குள்ள பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்கள் தெரிவித்தனர்.

தமக்கு தண்ணீர் கிடைக்க வேறு மாற்று வழிகள் இல்லை என்றும் கூறுகின்றனர். எனவே, தங்களுக்கு விரைவில் தடையில்லா குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் குண்டசாலை நீர் விநியோகத்திட்ட முகாமையாளர் மற்றும் நீர்த் விநியோகத் திட்ட பொறியியலாளர் எச்.பி.கே.எஸ். பத்திரண கூறுகையில்,

குண்டசாலை நீர் விநியோகத்த்திட்டத்தின் மூலம் 30,000 குடும்பங்களைச் சேர்ந்த 1,50,000 பேருக்கு குடிநீர் வழங்கப்படுகின்றது. மகாவலி ஆறு வறண்டு காணப்படுவதால் இந்நாட்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கு பல மாற்று திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன - என்றார்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# நுவரெலியா பஸ் உரிமையாளர்கள் தனியார் வர்த்தகர்களிடையே முரண்பாடு



(செ.திவாகரன்)

நுவரெலியாவில் வசந்தகாலத்தை முன்னிட்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த லொறி உரிமையாளருக்கும் பஸ் உரிமையாளர்களுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

நுவரெலியாவிற்கு தூரப் பகுதியிலிருந்து வருகை தரும் பஸ்களை நிறுத்துவதற்கு தனியான இடம் ஒதுக்கப்பட்டு சுமார் ஐந்து மாதங்களாகின்றன.

இருந்தும் தற்போது இவ்விடத்தில் நுவரெலியா வசந்தகாலத்தை முன்னிட்டு மாநகர சபையின்மூலம் வியாபாரம் செய்வதற்கு லொறி நிறுத்திவைக் கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை அகற்றுமாறு கோரி வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுடன் நுவரெலியா தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக சம்பவ இடத்துக்கு விரைந்த நுவரெலியா பொலிஸார் வியாபாரம் செய்பவர்களிடம் இவ்விடத்தில் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு உரிய ஆவணங்கள் இல்லாமையினால் வியாபாரம் செய்வதற்காக நிறுத்தப்பட்ட லொறியை அகற்ற கோரிக்கை விடுத்தனர்.

# உணவுகள் குறித்து அவதானம் தேவை!

செ.திவாகரன்

உணவுகள் குறித்து அவதானமாக இருக்குமாறு நுவரெலியா மாநகர சபை பொதுச் சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

வசந்த காலத்தை முன்னிட்டு நுவரெலியாவுக்கு வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஹோட்டல்களிலும் ஏப்ரல் வசந்தகாலத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள தற்காலிக உணவு கடைகளிலும் சிற்றூண்டிச்சாலைகளிலும் உணவுகள் மற்றும் இனிப்பு உணவுப் பண்டங்களையும் உண்பதற்கு முன் உரிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதா என பார்த்து கொள்வனவு செய்யுமாறு நுவரெலியா மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பொதுமக்களை கோரியுள்ளனர்.

நுவரெலியாவுக்கு அதிக எண்ணிக்கையிலானோர் வருகை தருவதால் சந்தையில் தற்போது காலாவதியான மற்றும் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் மிகவும் குறைந்த விலைகளில் விற்பனை செய்யக்கூடும்.

எனவே, பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் இவ்வாறு பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதை கண்டறிந்தால் கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கம் 0522222275 மூலம் நுவரெலியா மாநகர சபை பொதுசட சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்கும்படி மாநகர சபை பிரதான சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.






நுவரெலியா கந்தப்பளை தேயிலைமலை தோட்ட ஸ்ரீ பாலதண்டாயுதபானி ஆலயம் மற்றும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகியவற்றின் வருடாந்த திருவிழா அண்மையில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: ஆ.ரமேஸ்)

# கொரோனா இடைத்தங்கல் நிலையங்களிலிருந்து பல இலட்ச ரூபா பெறுமதியான பொருட்கள் மாயம்

## விசாரணைகள் ஆரம்பிக்கப் போவதையறிந்து திடீரென வந்திறங்கின



யாழ். மாவட்டத்தில் செயற்பட்ட கொரோனா இடைத்தங்கல் நிலையங்களில் பயன்படுத்தப்பட்ட பல பொருட்கள் மீள ஒப்படைக்கப்படாத நிலையில், திடீரென ஒரு தொகுதி பொருட்கள் யாழ். மாவட்டத்திலுள்ள ஒரு வைத்தியசாலையில் வந்து இறங்கியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

2019ஆம் ஆண்டு கொரோனா பேரிடர் காரணமாக யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் முகமாக மூன்று இடைத்தங்கல் நிலையங்கள் செயற்படுத்தப்பட்டன.

நாவற்குழி, மருதங்கேணி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட குறித்த இடைத்தங்கல் நிலையங்களுக்குத் தேவையான குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம் தொலைக்காட்சி மற்றும் பிளாஸ்ரிக் தகரங்கள் என பல இலட்ச ரூபா பெறுமதியான உபகரணங்கள் மூன்று நிலையங்களுக்கும் வழங்கப்பட்டன.

அப்போதைய வடமாகாண சுகாதாரப் பணிப்பாளராக இருந்த வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனின் கண்காணிப்பில் இயங்கிய குறித்த இடைத்தங்கல் நிலையங்கள் கொரோனா இடர்நிலை குறைவடைந்த பின்னர் முற்றுமுழுதாக அகற்றப்பட்டது.

இவ்வாறு அகற்றப்பட்ட இடைத்தங்கல் நிலையங்களில் பாவித்த பொருட்களில் பெரும்பாலானவை வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ் செயற்படும் கணக்குப் பிரிவிடம் மீள வரவிடப்படவில்லை.

அமைச்சால் வழங்கப்பட்ட நிதி உதவிகள், கொள்வனவுசெய்யப்பட்ட பொருட்கள், மாவட்ட அனர்த்த முகமைத்துவப் பிரிவினால் வழங்கப்பட்ட பொருட்கள், யாழ்ப்பாண பிரபல பாடசாலை ஒன்றின் பழைய மாணவர்களினால் அன்பளிப்பு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருட்கள் என பல மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் மூன்று இடைத்தங்கல் நிலையங்களுக்கும் பகிரப்பட்டன.

இவ்வாறான நிலையில், குறித்த இடைத்தங்கல் நிலையங்களில் பாவிக்கப்பட்ட பொருட்கள் மீள ஒப்படைக்கப்படாமை தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்த நிலையில், அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறித்த விடயம் தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளுமாறு வட மாகாண ஆளுநருக்குப் பணித்திருந்தார்.

எனினும், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக பல்வேறு பிரச்சினைகள் எழுந்த நிலையில், வடமாகாண சுகாதார அமைச்சினால் உள்ளக விசாரணை சற்று காலதாமதமாக ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த விசாரணைக் குழுவில் வடமாகாண சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தலைமையில் ஐவர் கொண்ட குழு நியமிக்கப்பட்ட நிலையில், குறித்த விசாரணைக் குழுவை அதிர்ச்சிக்குள்ளாக்கும் சம்பவங்கள் இடம்பெற்றன.

கொரோனா இடைத்தங்கல் நிலையங்களில் பாவிக்கப்பட்ட பல மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் சுகாதார அமைச்சிடம் மீள ஒப்படைக்கப்படாத நிலையில், விசாரணை ஆரம்பிக்கப்போகிறதென அறிந்த நிலையில், திடீரென தீவகப் பகுதியிலுள்ள வைத்தியசாலையில் காணாமல்போன பல பொருட்கள் இறக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் விசாரணைக் குழு தனது விசாரணையை முழுமையாக முடிக்காத நிலையில், பொருட்கள் திடீரென வந்து இறங்கியமை விசாரணைக் குழுவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகர்





(றிப்தி அலி)

எமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அனைத்து இன மக்களும் இணைந்து செயற்பட வேண்டும் - என ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன அழைப்பு விடுத்தார்.

இலங்கைத் தாய்நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் பிரித்தானியாவில் வாழ்கின்ற இலங்கையர்களுடன் லண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் நெருங்கி செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த அடிப்படையிலேயே ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை முஸ்லிம் அமைப்புகளின் கூட்டமைப்புடன் இணைந்து நோன்பு துறக்கும் 'இப்தார்' நிகழ்வினை ஏற்பாடு செய்தாக உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

எமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக பிரித்தானியாவில் வாழ்கின்ற இலங்கை முஸ்லிம்கள் தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற பங்களிப்பிற்கு நன்றி கூறுகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் தலைவர்களான டி.பி.ஜாயா, சேர் ராசீக் பரீட், எம்.சீ.எம்.கலீல், பதியுதீன் முஹம்மத், ஏ.சீ.எஸ்.ஹமீட் மற்றும் எம்.எச்.முஹம்மத் போன்ற முஸ்லிம் தலைவர்கள் நாட்டுக்கு அளப்பெரிய சேவையை மேற்கொண்டதாக உயர் ஸ்தானிகர் சரோஜா சிறிசேன மேலும் கூறினார்.

கொவிட் - 19 பரவல் காரணமாக கடந்த சில வருடங்களாக நடைபெறாதிருந்த ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் வருடாந்த இப்தார் கடந்த வியாழக்கிழமை (06) இடம்பெற்றது. உயர் ஸ்தானிகராலயத்தில் நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதில் பிரித்தானியாவிலுள்ள இலங்கை முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர். மர்யம் ஜெஸீமின் கிராஆதுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் ஐக்கிய இராச்சியத்தின் ஹரோ நகரிலுள்ள இலங்கை முஸ்லிம் கலாசார நிலையத்தின் இமாம் ஷெய்க் தல்ஹா சித்தீகி சிறப்புரை நிகழ்த்தினார்.

ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை முஸ்லிம் அமைப்புகளின் கூட்டமைப்பின் தலைவரான சாஹீர் நவாஸின் நெறிப்படுத்தில் இந்த இப்தார் நிகழ்வு இடம்பெற்றது.

# தேசிய வெசாக் பண்டிகை நிகழ்வுக்காக அலி சப்ரி ரஹீம் 7 இலட்ச ரூபா நன்கொடை



(ரஸீன் ரஸ்மின்)

தேசிய வெசாக் பண்டிகை நிகழ்வுக்காக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் 7 இலட்ச ரூபாவை நன்கொடை அளித்துள்ளார்.

புத்தளம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற நோன்புப் பெருநாள் விழா தொடர்பான கூட்டத்தில் மேற்படி உதவித்தொகைக்கான காசோலையை பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், புத்தளம் மாவட்ட செயலாளரிடம் கையளித்தார்.

தேசிய வெசாக் பண்டிகை இம்முறை புத்தளம் மாவட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் புத்தளம் மவாட்டச் செயலகத்தினால் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், சமகாலத்தில் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் அரச நிறுவனங்கள் செலவுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டுள்ளதால் மேற்படி வெசக் பண்டிகைக்கான செலவுகளுக்கு பணம் திரட்டுவதில் பாரிய சிக்கல்களை எதிர்நோகியுள்ளதாக புத்தளம் மாவட்டச் செயலாளர் எஸ்.எச்.எம்.பி.ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிடம் தெரிவித்திருந்தார்.

புத்தளம் மாவட்ட செயலாளரின் வேண்டுகோளுக்காக இந்த விடயத்தைக் கருத்திற்கொண்டு புத்தளம் மாவட்டதில் வசிக்கும் சகல இன மக்களின் சகவாழ்வுக்காக மேற்படி பண்டிகைக்காக ஏழு இலட்ச ரூபாவை அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

# துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் ரமழானை முன்னிட்டு உலர் உணவுப் பொதிகள்








(பேருவளை பீ.எம்.முக்தார்)

துருக்கி நாட்டின் இலங்கைத் தூதரகத்தினால் புனித ரமழானை முன்னிட்டு பேருவளை நகர சபை பகுதியில் 600 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (8) மாலை இடம்பெற்றது.

பேருவளை சபுகொட மகா விஹாரையில் 180 குடும்பங்களுக்கும், மருதானை அல்-பாஸியத்துல் நஸ்ரியா மகளிர் கல்லூரியில் 420 குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொதிகள் கையளிக்கப்பட்டன.

துருக்கி நாட்டின் இலங்கைத் தூதுவர் R.DEMET SEKER CIOGLU நிகழ்வில் கலந்துகொண்டு அவற்றைக் கையளித்தார்.

சபுகொட விகாரையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு விகாராதிபதி தங்கல சாரத தேரோ தலைமை வகித்தார். அதன் பரிபாலன சபை செயலாளர் டி.டி.குணசிங்க உட்பட பலரும் இங்கு உரையாற்றினர். கினியாவல பாலித தேரோவின் வழிகாட்டலின் கீழ் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

சமயப் பாடசாலை சிறார்களுக்கு தூதுவர் இனிப்புப் பண்டங்களை வழங்கி மகழ்வித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அல்-பாஸியத்துல் நஸ்ரியாவில் இடம்பெற்ற நிகழ்வுக்கு அப்ரார் பவுண்டேசன் தலைவர் நிஸாம் ஹாஜியார் தலைமை வகித்தார். அதன் உறுப்பினர்களான டில்சாத் அன்வர், றிஸ்கான் அப்துல் ஹமீத், எம்.எஸ்.எம்.ஹுஸைன், எம்.இஹ்ஸான் ஆசிரியர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

துருக்கி தூதரக அதிகாரி எம்.எஸ்.எம்.ராபி நிகழ்வை தெரியப்படுத்தினார்.

துருக்கித் தூதுவர் இங்கு உரையாற்றும்போது கூறியதாவது, இலங்கைக்கும் துருக்கி நாட்டுக்கும் இடையிலான உறவு நீண்டகாலமாக இருந்து வருகிறது. இருநாடுக்ளுக்குமிடையில் வர்த்தக, பொருளாதாரம் உள்ளிட்ட பல துறைகளில் உறவு மிகவும் சக்திபெற்று விளங்குகிறது. துருக்கி மக்கள் இலங்கை தேயிலையை மிகவும் விருப்பத்துடன் அதிகளவில் பாவிக்கின்றனர். அதேபோல் கூடுதலானோர் உல்லாசப் பயணிகளாக இலங்கைக்கு வருகின்றனர். நோன்பு நோற்கும் இஸ்லாமிய சகோதரர்களுக்கும் சிங்கள-தமிழ்ப் புத்தாண்டை கொண்டாடும் சிங்கள சகோதரர்களுக்கும் மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்யக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் - என்றார்.

சபுகொட விகாராதிபதி பேசும்போது, துருக்கி நாடு பாரிய நிலஅதிர்வை சந்தித்து 50,000 பேர் வரையில் பலியான நிலையில் இதுபோன்ற உதவியைச் செய்வதை பாராட்ட வேண்டும். தமது நாடு ஒரு பாரிய அழிவுக்கு முகம் கொடுத்துள்ள இந்த இக்கட்டான சூழ்நிலையில் சித்திரைப் புத்தாண்டை கொண்டாடவுள்ள சிங்கள மக்களுக்கு தாராள மனப்பான்மையுடன் உலர் உணவுப் பொருட்களை வழங்குற்காக நாம் நன்றி கூறுகிறேன்.

இரு சமூகங்களுக்கிடையில் இன உறவை மேலும் கட்டியெழுப்ப இது ஓர் உந்துசக்தியாக அமையும் என்றார். இஹ்ஸான் ஆசிரியர் பேருவளை வரலாற்றையும், இலங்கை-துருக்கி இடையிலான சக்திமிக்க உறவையும் இங்கு தெளிவாக எடுத்துக் கூறினார்.

# தீயணைக்க முற்பணம் கேட்ட விவகாரம்; உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும்

## யாழ். மாநகர ஆணையாளர் ஜெயசீலன் தெரிவிப்பு




யாழ். நகரப் பகுதியில் தீயணைப்புக்காக பணம் செலுத்தினால் மட்டும் வரமுடியுமென யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவிலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் - என யாழ். மாநகர ஆணையாளர் ஜெயசீலன் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ். சுண்டுக்குளி பகுதியில் நேற்று முன்தினம் (08) தீ அனர்த்தம் ஒன்று ஏற்பட்டது.

தீயை அணைப்பதற்கு யாழ். மாநகர சபைத் தீயணைப்புப் பிரிவுக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கப்பட்ட நிலையில், பணம் கட்டினால் வரமுடியும் என உத்தியோகத்தர் ஒருவரால் தெரிவிக்கப்பட்டதாக எழுந்த கருத்துத் தொடர்பில் ஆணையாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாநகர சபையின் தீர்மானத்தை அடிப்படையாக வைத்து கட்டண அறவீடு நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிலையில், முற்பணம் கட்டவேண்டிய தேவையில்லை.

இவ்வாறான நிலையில், மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் தவறான கருத்தை கூறியதாக எனக்கும் தகவல் கிடைத்தது.

ஆகவே, குறித்த உத்தியோகத்தர் பதிலளித்த விதம் தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# காரில் பயணித்தவரை வழிமறித்து வாள்வெட்டு!



கார் ஒன்றில் பயணித்தவரை மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் வீதியில் வழிமறித்து வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் பண்ணாகம் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே காயங்களுக்குள்ளான நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த இளவாலை பொலிஸார் 25 மற்றும் 30 வயதுடைய இருவரை கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# போதை மாத்திரைகளுடன் உடுவிலில் ஒருவர் கைது!



இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சுன்னாகம் ஆலடி பகுதியில் சுன்னாக பொலிஸாருடன் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது 29 வயதுடைய நபர் ஒருவரிடமிருந்து 36 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, அவர் பயணித்த மோட்டார்சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, குறித்த நபர் நீண்டகாலமாக போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்டு வந்ததாகவும் குறித்த விடயம் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்று முன்தினம் (08) பொலிஸார் நடத்திய தேடுதலின்போதே கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# திருநெல்வேலி சைவச் சிறார் இல்லச் சிறுவர்கள் இருவரைக் காணவில்லை

(யாழ். நிருபர்)



திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சைவச் சிறுவர் இல்லத்திலிருந்த இரண்டு சிறுவர்களை கடந்த மாதம் 27ஆம் திகதிமுதல் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இன்றுவரை அவர்கள் எங்குள்ளார்கள் என்பது தெரியவில்லை.

சிறுவர் இல்லத்தில் கடந்த 27ஆம் திகதி குழப்பநிலை ஏற்பட்டது. சிறுவர் இல்ல விடுதி நிர்வாகத்துக்கு எதிராக நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கில், நிர்வாகத்துக்கு எதிராக வாக்குமூலம் வழங்கிய விடுதியின் முகாமையாளர் சிறுவர் நீதிமன்றால் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தார். இதனையடுத்து சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த சிறுவர்கள், இல்ல நிர்வாகக் கட்டடங்களுக்குச் சேதம் விளைவித்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய சிறுவர்களென நான்கு பேரது பெயர்களைக் குறிப்பிட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு பெயர் குறிப்பிட்ட நான்கு சிறுவர்களில் இருவரே அன்றைய தினம் முதல் காணாமல்போயுள்ளனர்.

சிறுவர் இல்லத்தில் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட 12 சிறுவர்கள், சிறுவர் நீதிமன்றத்தால் சான்று பெற்ற பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அச்சுவேலியில் கஞ்சாவுடன் இருவர் கைது!

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவகிரி பகுதியில் வைத்து, குப்பிளான் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவர் கஞ்சாவுடன் நேற்று முன்தினம் (08) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையின்போது கஞ்சாவினை விற்பனைசெய்த 28 வயதுடைய பெண்ணொருவர் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து 157 கிராம் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த கைது நடவடிக்கை காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர்.

இது குறித்து மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டார் வாழ் கல்முனைவாசிகள் நடத்திய இப்தாரும் வருடாந்த பொதுக் கூட்டமும்



(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனைக்கான வளைகுடா அமையத்தின் (GFK) ஏற்பாட்டில் கட்டாரில் வசிக்கும் கல்முனைச் சகோதரர்களுக்கான இப்தார் நிகழ்வும், வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தெரிவும் கட்டார் ஸ்டபர்ட் ஸ்ரீலங்கா பாடசாலையில் வெள்ளிக்கிழமை (07) நடைபெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்பமாக அல்ஹாபிழ் எம்.எம்.ஏ.அபாஜ் மன்சூர்(பாகவி) கிராத் ஓதி ஆரம்பித்து வைத்தார். இதனையடுத்து, கல்முனைக்கான வளைகுடா அமையத்தின் தலைவர் எம்.எல்.எம்.ரௌசூல் இலாஹி வரவேற்புரை நிகழ்த்தினார்.

இதில் கல்முனைக்கான வளைகுடா அமையமானது கல்முனை பிரதேச சமூக நலன் உதவியை மேற்கொள்ளும் முகமாகவும் கட்டாரில் வசிக்கும் கல்முனையைச் சேர்ந்தவர்களுக்கான உதவி வழிகாட்டல் மேம்பாடு உட்பட இதர நலன்சார் உதவியைக் கருதி 2015இல் ஆரம்பிக்கப்பட்டதென தனது வரவேற்புரையில் தெரிவித்தார்.

பின்னர் இஸ்லாமிய மார்க்கச் சொற்பொழிவை மௌலவி எஸ்.எம்.புகாரி (மஜீதி) மேற்கொண்டார். நிகழ்வின் தொடர்ச்சியாக அல்ஹாபிழ் எம்.எம்.ஏ.அபாஜ் மன்சூர் (பாகவி) துஆப் பிரார்த்தனை இடம்பெற்றது.

மேலும், கல்முனைக்கான வளைகுடா அமையத்தினால் கல்முனை பிரதேசத்தில் ஆரம்ப காலம் தொடக்கம் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சேவைகள் தொடர்பில் முன்னாள் தலைவர் எஸ்.எல்.அன்வர் கருத்துரைத்தார்.

இதில் வாழ்வாதார உதவிகள், பாடசாலை மாணவர்களின் நலன்கருதி கற்றல் உபகரணங்கள் வழங்கல், மாணவர்களுக்கான கல்வி புலமைப்பரிசில், சுயதொழில் வழிகாட்டல், கொரோனா தொற்று காலப்பகுதியில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு தேவையான வைத்திய உபகரணங்கள் வழங்கிவைப்பு போன்ற மேலும் பல சமூக நலன் உதவித் திட்டங்கள் கல்முனைக்கான வளைகுடா அமையத்தின் கட்டாரில் வசிக்கும் கல்முனையைச் சேர்ந்தவர்களின் ஒத்துழைப்புடன் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

பின்னர் நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தையடுத்து புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தெரிவுக்காக கலந்து கொண்டவர்கள் அனைவர் மத்தியிலும் பகிரங்க அழைப்பின் மூலம் தன்னார்வமாக சிலர் தாமாக முன்வந்ததுடன், புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தெரிவு ஏகமனதாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விசேடமாக, சிறுவர்களை மகிழ்விக்கும் முகமாக அனைவருக்கும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இறுதியாக நன்றியுரையை அமையத்தின் செயலாளர் எம்.எவ்.ஏ.ஜே.ஜெஸ்னி நிகழ்த்தினார். மேலும், கட்டார் வாழ் கல்முனையைச் சேர்ந்தவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர். இவ்வாறான ஒன்றுகூடலை சிறப்பான முறையில் மேற்கொண்ட ஏற்பாட்டுக் குழுவினருக்கு குறித்த நிகழ்வில் கலந்துகொண்ட கட்டாரில் வசிக்கும் கல்முனையைச் சேர்ந்தவர்கள் தமது நன்றியைத் தெரிவித்தனர்.

நிகழ்ச்சித் தொகுப்பினை அறிவிப்பாளர்களான முனபர் ஏ.சி.முனவ்வர், ஏ.பி.எம்.ரினோஸ் ஆகியோர் மேற்கொண்டனர்.

# பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் இப்தார்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தின் பழைய மாணவர் அமைப்பின் ஏற்பாட்டிலான இப்தார் நிகழ்வு அமைப்பின் செயலாளரும் பொறியியலாளருமான எம்.ஐ.எம்.றியாஸின் நெறிப்படுத்தலில் தலைவரும் பாடசாலை அதிபருமான எம்.ஐ.எம்.சைபுடீன் தலைமையில் பாடசாலை கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலையை இன்னும் வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் அமைப்பின் செயற்றிட்டத்தின் கீழ் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றுவரும் நிலையில், PAST PUPILS' ASSOCIATIONனின் உயர்மட்ட உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள், பழைய மாணவர்களான தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளரும் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஏ.எல்.எம்.சலீம் மற்றும் சாய்ந்தமருது முபாறக் டெக்ஸ்டைல்ஸ் குழுமத்தின் உரிமையாளர் எம்.எஸ்.எம்.முபாறக் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

பாடசாலையை மேலும் முன்கொண்டு செல்வதற்கான பல்வேறு முன்மொழிவுகளை உபவேந்தர் றமீஸ் மற்றும் முபாறக் ஆகியோர் முன்வைத்தனர். சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய அதிபர் எம்.எஸ்.நபார், சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ், சாய்ந்தமருது முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி எம்.எம்.இஸ்மாயில், ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனை அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ்.எம்.ரஸாக், கல்முனை வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சாய்ந்தமருதில் மரம் நடும் நிகழ்வு

(மாளிகைக்காடு, பொலிவேரியன் செய்தியாளர்கள்)



சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சாய்ந்தமருது பிரதேச கலாசார மத்திய நிலையத்தில் வியாழக்கிழமை (06) மரம் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம்.றிம்சானின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பழீல், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.சமூன், நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.சுரேஷ் குமார், கலாசார உத்தியோகத்தர் ஏ.எச்.சபீக்கா மற்றும் கலாசாரப் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.சத்தியவதி மற்றும் கலாசார மத்திய நிலையத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# பல்கலைக்குத் தெரிவானவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் வைபவம்

(அப்துல்சலாம் யாசீம்)



திருகோணமலை மாவட்டத்தில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான 61 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் ஞாயிற்றுக்கிழமை(09) திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத்தினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய நிலையில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட மாணவர்களை இனங்கண்டு அவர்களின் கல்விக்காக உதவும் நோக்கில் திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத்தின் (கனடா) ஊடாக முதல் கட்டமாக மாணவர் ஒருவருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது.

திருகோணமலை நகர சபை மண்டப கேட்போர் கூடத்தில் திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத்தின் தலைவர் எஸ்.குகதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மூதூர் - திரியாய், வெருகல், ஈச்சிலம்பற்று மற்றும் திருகோணமலை பட்டணமும் சூழலும் பகுதிகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்நிதி வழங்கப்பட்டது. இதன்போது திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்க கனடா சங்கத்தின் தலைவர் டி.ரகுநாதன், டொக்டர் கே.சரவணபவன் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



ரமழான் நோன்பு மாதத்தினை முன்னிட்டு, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வருமானம் குறைந்த மற்றும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதி வழங்கும் வேலைத்திட்டம் செட்டோ – ஸ்ரீலங்கா அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது முதல் கட்டமாக கோணாவத்தையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 55 குடும்பங்களுக்கு மூவாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதி வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (06) இடம்பெற்றது. அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஏ.எல்.நியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் ஷாபீர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கினார். (பொத்துவில் செய்தியாளர்)





மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியிலுள்ள இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (08) மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பு கனிஷ்ட வித்தியாலயத்தில் இடம்பெற்றது. காந்தி மற்றும் சக்தி விளையாட்டுக்கழகங்கள் இணைந்து 'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. (கல்லடி செய்தியாளர்)



பெரிய வெள்ளி தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு நாவற்குடா லூர்த்து மாதா தேவாலய போதகர் கே.ஜேசுதாசன் மற்றும் உதவிப் போதகர் அலல் ஆகியோரின் ஆசீர்வாதத்துடனும், பங்கு மக்களின் பங்கேற்புடனும் வெள்ளிக்கிழமை (07) திருச்சொரூப ஊர்வலம் இடம்பெற்றது. தேவாலய வளாகத்திலிருந்து ஆரம்பமான திருச்சொரூப ஊர்வலமானது புதிய கல்முனை வீதியூடாக கல்லடி மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியை அடைந்து, கல்லடி பழைய கல்முனை வீதியூடாக தேவாலயத்தைச் சென்றடைந்தது. இதன்போது பங்கு மக்கள் பலரும் கலந்துகொண்டனர். (கல்லடி செய்தியாளர்)



சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத் தலைவராகவும் சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் பிரதித் தலைவராகவும் நீண்டகாலம் பணியாற்றி, அண்மையில் காலஞ்சென்ற ஹஸ்ரத் அல்ஹாஜ் யூ.எல்.எம்.காஸிம் மௌலவியின் நினைவாக கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாட்டில் இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்வும் விசேட துஆப் பிரார்த்தனையும் சனிக்கிழமை (08) மாலை கலாபீட மண்டபத்தில் நடைபெற்றது. தஃவா இஸ்லாமிய கலாபீட ஆளுநர் சபையின் பதில் தலைவர் ஐ.எல்.ஏ.மஜீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ரஹ்மத் பவுண்டேஷன் தலைவரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். இதன்போது அல்ஹாபிழ் மௌலவி எம்.பாஹிம் விசேட துஆப் பிரார்த்தனையை மேற்கொண்டதுடன், கலாபீடத்தின் தேவைகள் தொடர்பான கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (சாய்ந்தமருது செய்தியாளர்)



புனித நோன்பு பெருநாளை முன்னிட்டு மட்டக்களப்பு - ஏறாவூர்ப் பிரதேசத்திலுள்ள வாழ்வாதாரம் குறைந்த 130 குடும்பங்களுக்கு 3500ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு ஒன்றியத்தின் தலைவர் செய்யித் அஹமதின் தலைமையில் மிச்நகர் இல்மா பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கட்டாரில் தொழில் புரியும் ஏறாவூர்ப் பிரதேச இளைஞர்கள் மற்றும் சமூக சேவைகள் அபிவிருத்தி ஒன்றியம் ஆகியன ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூதின், ஒன்றிய அமைப்பாளர் எஸ்.எம்.எம்.ஹனிபா, சமூக சேவைகள் உத்தியோகத்தர் நஜிமுதீன், பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் முகைதீன், முன்னாள் அதிபர் றிபாய்தீன் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் முபாறக் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஏறாவூர் செய்தியாளர்)

## சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய

# அதிபர் றிப்காவை தொடர்ந்தும் பணியாற்றுமாறு வலியுறுத்தி பெற்றோர் கவனயீர்ப்புப் போராட்டம்





(பொலிவேரியன் செய்தியாளர், எஸ்.அஷ்ரப்கான், பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை புரியும் பெண் அதிபர் றிப்கா அன்சாரை அதிபராக தொடர வழிவிடுங்கள் - எனக் கோரி சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை நலன்விரும்பிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் சனிக்கிழமை (08) சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

''நிறுத்து நிறுத்து புதிய அதிபர் நியமனத்தை நிறுத்து, வேண்டாம் வேண்டாம் இரண்டு அதிபர்கள் வேண்டாம், சீரழிக்காதே சீரழிக்காதே மாணவர்களின் கல்வியைச் சீரழிக்காதே, எம் பிள்ளைகளின் கல்வியை சிபாரிசுகளால் வீணாக்காதே! ஏழை மாணவர்கள் ஒளி பெற வழி விடு, சாய்ந்தமருதூரின் கல்வி பாரம்பரியத்தை சாய்ப்பதற்குத் திட்டமா? கல்விப் புலமே கண்ணைத் திற, ஏழைகளின் கல்வியில் கல்லை எறியாதே, விளையாடாதே விளையாடாதே பிள்ளைகளின் படிப்பில் விளையாடாதே, நேரசூசி அற்ற ஆசிரியர்களுக்கு வக்காலத்து வாங்கும் அதிபர் நியமனத்தை நிறுத்து, ஊருக்கு ஊர் விரட்டப்பட்ட அதிபர் வேண்டாம் எங்கள் பாடசாலைக்கு, வேண்டாம் வேண்டாம் பாடசாலையைக் குழப்ப வேண்டாம், சாய்ந்தமருது பாடசாலைகளுக்கு இரு அதிபர்களை நியமித்துக் குழப்பும் கல்வி அதிகாரியே வெளியேறு'' போன்ற கோஷங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தோடு, பெண் அதிபர் ஒருவர் இருப்பதன் காரணமாகத்தான் நாங்கள் எமது பிள்ளைகளை பாடசாலையில் சேர்த்திருக்கின்றோம். பாடசாலையில் பெண்பிள்ளைகளுக்கு பெண் அதிபர் இருப்பதுதான் பெரும் பாதுகாப்பு. எனவே, இப்பாடசாலைக்கு பெண் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதால்தான் எமது பிள்ளைகளை இம்முறை இப்பாடசாலைக்கு சேர்த்திருக்கிறோம். புதிய ஆண் அதிபர் இங்கே வருவதானால் எமது பிள்ளைகளை நாங்கள் வேறொரு பாடசாலைகளில் சேர்க்க எண்ணியிருக்கின்றோம் என அங்கு போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் இதன்போது கருத்து தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கரிசனை எடுத்து உடனடியாக தற்போதுள்ள பெண் அதிபரையே நிரந்தரமாக நியமித்துத் தருமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய புதிய அதிபராக நபார் பொறுப்பேற்பு!

(மாளிகைக்காடு செய்தியாளர்)



கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) அதிபராக அதிபர் தரம் ஒன்றைச் சேர்ந்த எம்.எஸ்.நபார் வியாழக்கிழமை (06) முதல் பொறுப்பேற்றார்.

கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான எம்.என்.எம்.மலிக் முன்னிலையில் பாடசாலை பிரதி அதிபர் தன்ஸீலிடமிருந்து பொறுப்புகளைக் கையேற்றார்.

பேராதெனிய பல்கலைக்கழக கலைமாணி சிறப்பு பட்டதாரியான இவர், ஆரம்பத்தில் பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து சமூக சேவை திணைக்களம், கட்டிடங்கள் சேவை திணைக்களம் ஆகியவற்றில் பணியாற்றிய பின், பட்டதாரி ஆசிரியர் சேவையில் தெரிவுசெய்யப்பட்டு சாய்ந்தமருது கமு/ கமு/ மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயம், கமு/ கமு/ அல்-பஹ்ரியா மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியப் பணி புரிந்தார்.

மிகக் குறுகிய காலத்தில் அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து சாய்ந்தமருது கமு/கமு/அல்-ஜலால் வித்தியாலயம், மாவடிப்பள்ளி கமு/கமு/அஷ்ரப் மகா வித்தியாலயம், கல்முனை கமு/கமு/ அல்-பஹ்ரியா மகா வித்தியாலயம், கமு/அக்/அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை, கமு/ கமு/ மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயம் போன்றவற்றில் அதிபராக கடமையாற்றியிருந்தார்.

கல்வி நிர்வாக சேவை (SLEAS-3 சேவை மூப்பு) போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவர், பிரதேசத்தில் நன்மதிப்பைப் பெற்ற அதிபர்களில் ஒருவராகத் திகழ்கிறார். இவருக்கான நியமனக் கடிதத்தை செவ்வாய்க்கிழமை (04) கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் வழங்கியிருந்தார்.

## போடியார் புலம்பல்!



புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் வந்தால் நாட்டில எல்லோரும் பயங்கரவாதிகளாகுவார்களாம் எண்டு பேராசிரியர் ஜயதேவா உதயங்கொட சொல்லியிருக்காரு எலுவா.?

ஓம் ஐயா இப்ப நடைமுறயில இருக்கிற பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர்கள மட்டும் பயங்கரவாதிகளாக பார்த்த சட்டம். இனி சிங்கள, முஸ்லிம், பறங்கியர் எல்லோரையும் தமிழர்களுடன் சேர்த்து கோருவக்கொடியோடு பயங்கரவாதிகள் எண்டு கைம்பி எண்ண வைக்கப்போகுது போல. சரி, இந்த புதிய சட்டத்த தயாரித்த சட்ட வல்லுனர் ஸ்ரீலங்காவில பொறந்தவர்தானே. அவருக்கு இது ஏன் புரியல்லடாப்பா.!

# அட்டப்பள்ளம் பிரதேச கடலரிப்பை தடுக்க நடவடிக்கை முன்னெடுப்பு

## அமைச்சர் டக்ளஸ் பணிப்பு



(திகாமடுல்ல செய்தியாளர்)

நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் கடந்த சில மாதங்களாக நிலவிவரும் கடலரிப்பினால், இப்பகுதியில் காணப்படும் கரையோர வளங்கள் முற்றாக அழிந்துள்ள நிலையில், இந்தக் கடலரிப்பினைத் தடுப்பதற்கு தான் துரித நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் வை.எல்.சுலைமாலெவ்வையின் அழைப்பையேற்று, சனிக்கிழமை(08) திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்ட அமைச்சர், குறித்த கடலரிப்பு இடம்பெறும் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார். அங்கு கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரடியாகப் பார்வையிட்டதுடன், மிக விரைவில் இதனை நிலையாகத் தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளை தனது அமைச்சின் மூலம் எடுப்பதற்கு தான் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.


மேலும் நிந்தவூரின் பிரதான கடற்கரையோரங்களில் கடந்த வருடங்களாக ஏற்படுத்தப்பட்டிருந்த கடலரிப்பானது, தற்பொழுது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், முதற்கட்டமாக நான்கு இடங்களில் இதனை தடுப்பதற்கு நிலையான தடுப்புச்சுவர்கள் அமைக்கப்பட்டிருக்கின்ற வேலைகளையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த விஜயத்தின்போது அமைச்சருடன், முன்னாள் பிரதேச சபை உதவித் தவிசாளர் வை.எல்.சுலைமாலெவ்வை, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கே.எம்.எம்.ஜாரிஸ், பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் செயலாளர் ஏ.அஸ்லம், உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்பாளர் ஏ.அப்துல் கபூர், அட்டப்பள்ளம் அம்மன் கோயில் தலைவர் கோபால், கிழக்கு மாகாண ஆளுநரின் சுற்றுலாத்துறை பணிப்பாளர் சபை உறுப்பினர் எஸ்.எல்.எம். நாசிறூன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# தோப்பூரில் பயன்தரு மரங்களுக்குச் சேதம்

## காட்டு யானைகளைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(மூதூர் செய்தியாளர்)



திருகோணமலை, தோப்பூர், நீணாக்கேணி கிராமத்திற்குள் ஞாயிற்றுக்கிழமை (09) அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் பயிரினங்களுக்கு சேதம் விளைவித்துள்ளன. இதன்போது பயன்தரு 10இற்கும் மேற்பட்ட தென்னைமரங்களை காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ள அதேவேளை, பயிற்றை, வெண்டி உள்ளிட்ட பயிரினங்களுக்கும் சேதம் விளைவித்துள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றன.

இது குறித்து பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், 10, 15 வருடங்கள் பாதுகாத்து வளர்த்த தென்னை உள்ளிட்ட பயிர்களை யானைகள் சேதப்படுத்தியுள்ளன. இதனால் இரவுவேளைகளில் வீட்டில் இருப்பதற்கு கூட அச்சமாக உள்ளது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் தமது கிராமத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவித்தார்.

இப்படியே யானைகள் தமது ஜீவனோபாயத்தை அழித்துச் சென்றால் நாம் எங்கு போவது? தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் யானைகளும் சேதப்படுத்துகின்றன. காட்டு யானைகளின் விடயத்தில் யாரும் கண்டுகொள்வதில்லை. பாதிக்கப்பட்டுள்ள தமக்கு அரசாங்கம் மின்சார வேலியையும், நஷ்ட ஈட்டினையும் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தோப்பூர் - நீணாக்கேணி கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# உயிரிழந்த நிலையில் காட்டு யானை மீட்பு

(மட்டக்களப்பு செய்தியாளர்)



மட்டக்களப்பு படுவாங்கரைப் பிரதேசத்திற்குட்பட்ட தாந்தாமலைப் பகுதியில் உயிரிழந்த நிலையில் காட்டுயானை ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் பாதுகாப்பு சுற்றுவட்டார அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாந்தாமலைப் பகுயியில் அமைந்துள்ள றெட்பாணா வீட்டுத்திட்டம் அமைந்துள்ள நீர் நிலை ஒன்றில் காட்டு யானை ஒன்று விழுந்து கிடப்பதாக அப்பகுதி பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் உடன் விரைந்து யானையை பரிசோதித்ததன் அடிப்படையில் குறித்த யானை உயிரிழந்துள்ளதை அவதானித்ததாக அவ்வதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த யானை சுமார் 10 தொடக்கம் 15 வயது மதிக்கத்தக்கதாகும். நீதிமன்ற உத்தரவு கிடைக்கப்பெற்றதும் பிரேத பரிசோதனையின் பின்னரே இந்த யானையின் மரணத்திற்கான காரணம் தெரியவரும் என வனஜீவராசிகள் பாதுகாப்பு சுற்றுவட்டார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உயிர்த்த ஞாயிறு தின ஆராதனைகள்

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உயிர்த்த ஞாயிறு தின ஆராதனைகள் ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்றன. கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தினத்தில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலில் 31 பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து மாவட்டத்தில் கடந்த 4 வருடங்களாக கிறிஸ்தவ தேவாலயங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்றுவரும் ஆராதனைகளின்போது தேவாலயத்தில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். இந்நிலையில், நேற்று உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

இதன்போது இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தேவாலயங்களில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு ஆராதனையில் ஈடுபட்டனர்.

# நிர்வாகத் தெரிவில் கைகலப்பு: ஒருவர் பலி!

(மாளிகைக்காடு, சம்மாந்துறை செய்தியாளர்கள்)

சம்மாந்துறை மலையடி கிராமம் 4, கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 65 வயதான நபர் ஒருவர் மதஸ்தலம் ஒன்றின் நிர்வாகத் தெரிவில் ஏற்பட்ட கைகலப்பில் வெள்ளிக்கிழமை(07) மாலை உயிரிழந்துள்ளார்.

சம்மாந்துறை பள்ளிவாசல் ஒன்றின் நிர்வாகக் காலம் முடிந்த நிலையில், கூட்டத்தில் பங்குபற்றிய ஒருசிலர் பெருநாள் முடிந்தவுடன் நிர்வாகத்தை தெரிவுசெய்யுமாறும், மற்றைய குழுவினர் ஓரிரு தினங்களுக்குள் தெரிவுசெய்ய வேண்டுமென வலியுறுத்தியதன் காரணமாகவும் ஞாயிற்றுக்கிழமை நிர்வாகத்தை தெரிவுசெய்ய முடிவெடுத்து கலைந்து வெளியே வரும் போதே இம்மோதல் இடம்பெற்றதாக சம்பவம் குறித்து தெரியவருகின்றது. சம்பவம் குறித்தான மேலதிக விசாரணையை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், சந்தேகத்தின் அடிப்படையில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூரில் தனியார் வகுப்புகளை இடைநிறுத்துமாறு கோரிக்கை!

(எருவில் செய்தியாளர்)

நிந்தவூர் பிரதேசத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் (ரியூசன்) புனித நோன்பின் கடைசி பத்து தினங்களும் முழுமையாக தனியார் வகுப்புகளை இடைநிறுத்துமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அனுஷ்டிக்கப்படும் புனித நோன்பின் கடைசி பத்தின் மாண்பைப் பேணும் விதத்தில் குறித்த தனியார் வகுப்புகள் இடைநிறுத்தப்படவேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிந்தவூர்க் கிளையும் நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையும் இணைந்து இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளன.

புனித நோன்புகாலத்தில் தனியார் வகுப்புகள் நடத்துவது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள மேற்படி இடைநிறுத்தல் தீர்மானம் தொடர்பில் பொதுமக்கள் பெரும் வரவேற்பளித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிந்தவூர் கிளைத் தலைவர் அஷ்ஷெய்க் என்.இஸ்மான் (ஷர்க்கி), நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் எஸ்.எம்.பீ.எம்.பாறூக் இப்றாகீம் ஆகியோர் கையொப்பமிட்டு விடுத்துள்ள அறிவிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''நிந்தவூர்ப் பிரதேசத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் காலைமுதல் மாலை 5 மணிவரை தனியார் வகுப்புகளை நடத்துவதாகவும், அதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மார்க்கக் கடமைகளை நிறைவேற்ற முடியாத அளவிற்கு நிலைமைகள் விபரீதமடைந்துள்ளதாகவும் பல்வேறு தரப்பிலிருந்தும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

அந்தவகையில் ரமழான் நோன்பு விடுமுறை முஸ்லிம் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள நோக்கிலும், நிலையிலும் இக்காலங்கள் இபாதத் செய்வதற்கும், ஆன்மீக மேம்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்தவும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் வழிகாட்ட வேண்டும்.

எனவே, நோன்பு 20 வரைக்கும் அனைத்து தனியார் வகுப்புகளையும், லுஹர் தொழுகைக்கு முன்னர் முடித்துக்கொள்ளுமாறும், நோன்பு 20 முதல் பெருநாள் வரைக்கும் கடைசி பத்தின் மாண்பை பேணும் விதத்தில் முழுமையாக தனியார் வகுப்புகளை இடைநிறுத்தி ஆசிரியர்கள், மாணவர்கள் தங்களின் மார்க்க கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைக்குமாறும் கோருகின்றோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் பிரதேசத்திலுள்ள அனைத்துப் பள்ளிவாசல்களதும் ஒலிபெருக்கிகள் மூலம் இந்த விடயம் தொடர்பான பகிரங்க அறிவிப்புகளும் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆலய குருவின் 35ஆயிரம் ரூபா உள்ளிட்ட பொருட்கள் திருட்டு

## மட்டு. அரசடி சந்திப் பிள்ளையார் ஆலயத்தில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள அரசடி சந்திப் பிள்ளையார் ஆலயத்தில் குருக்களின் கையடக்கத் தொலைபேசி, 35 ஆயிரம் ரூபா பணம், திறப்பு கோர்வை மற்றும் கைப்பை(பேர்ஸ்) என்பனவற்றை சனிக்கிழமை (08) காலை சந்தேக நபர் ஒருவர் திருடிச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலய குருக்கள் குறித்த ஆலயத்தில் வழமைபோல் பூஜை செய்வதற்காக சம்பவதினம் காலை 6 மணிக்கு சென்று தனது கையடக்கத் தொலைபேசி மற்றும் கைப்பையில் வைத்திருந்த 35 ஆயிரம் ரூபா பணம், ஆலய திறப்புக் கோர்வை, கியூபர் அட்டை, அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றை அறையில் வைத்துவிட்டு பூஜை வழிபாட்டில் ஈடுபட்டுவிட்டு 7 மணியளவில் அறைக்கு சென்றபோது அங்கு வைத்திருந்த பொருட்கள் திருட்டுப்போயுள்ளன.

இதனையடுத்து, ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கெமராவை பார்த்தபோது அதில் இளைஞன் ஒருவர் முகத்தில் முகக்கவசம் அணிந்தவாறு அறையினுள் சென்று அங்கிருந்த கையடக்கத் தொலைபேசி மற்றும் பணம் உள்ளிட்ட பொருட்களை திருடிக்கொண்டு செல்வது பதிவாகியிருந்தது.

இதனையடுத்து, ஆலய குரு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை அடையாளம் தெரிந்தவர்கள் உடனடியாக பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ''அனைத்துப் போர்களையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்''

## ஈஸ்டர் உரையில் போப் பிரான்சிஸ் வலியுறுத்து



''அனைத்துப் போர்களையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்'' - இவ்வாறு போப் பிரான்சிஸ் ஈஸ்டர் உரையில் வலியுறுத்தியுள்ளார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளான ஈஸ்டர் திருநாளை முன்னிட்டு வத்திக்கான் தேவாலயத்தில் போப் பிரான்சிஸ் சிறப்புப் பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

முன்னதாக வத்திக்கானின் புனித பீற்றர் ஆலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனைக்கு போப் பிரான்சிஸ் அழைத்து வரப்பட்டார். இதையடுத்து அங்கு நடைபெற்ற வழிபாட்டுக்கு பிரான்சிஸ் தலைமை வகித்தார்.

இந்த நிகழ்வில் கத்தோலிக்க மதத்தைத் தழுவிய 8 வயது சிறுவன் ஒருவனுக்கு ஞானஸ்நானம் செய்தார். பின்னர் உரையாற்றிய அவர், உலகில் அனைத்துப் போர்களையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் உக்ரைன் மக்களை 'தியாகிகள்' என்றும் குறிப்பிட்டார்.

மேலும், உறுதியான மற்றும் நம்பிக்கையான குரலில் தனது உரையைப் படித்த பிரான்சிஸ், நம்பிக்கையின் ஊற்று வறண்டுவிட்டதாக மக்கள் உணர்ந்தாலும், தோல்வியின் உணர்வில் உறைந்து போகாமல், கடவுளின் உதவியுடன் 'உள் எழுச்சியை' தேடுவது முக்கியம் என்று தெரிவித்தார்.

## தென்சீனக் கடலில் பதற்றம்

# 8 போர்க் கப்பல் - 42 விமானங்களுடன் தாய்வானை முற்றுகையிட்டு சீனா போர் ஒத்திகை



போர்ப் பதற்றத்துக்கு மத்தியில் தாய்வான் அருகே, சீன போர்க் கப்பல்கள், போர் விமானங்கள் ஒத்திகைபங பயிற்சியில் ஈடுபட்டுள்ளமை பதற்றத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

தாய்வானை தங்களது நாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக சீன அரசு கூறிவருகின்றது. தாய்வானுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றது. இந்நிலையில், தாய்வான் ஜனாதிபதி சாய் இங் வென் அமெரிக்க சபாநாயகரை கடந்த வியாழன்று கலிபோர்னியாவில் சந்தித்துப் பேசினார். இதனால் அதிருப்தியடைந்த சீனா, தாய்வானை மிரட்டும் வகையில் 3 நாட்கள் போர் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளது.

8 போர்க் கப்பல்கள், 42 விமானங்கள் தாய்வான் எல்லையை முற்றுகையிட்டு போர் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து சீன இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,


"தாய்வானின் சுதந்திரத்துக்கான பிரிவினைவாத சக்திகள் மற்றும் வெளிச்சக்திகளுக்கு எதிரான தீவிர எச்சரிக்கை இது. ஒத்திகையானது தேசிய இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்கத் தேவையான நடவடிக்கையாகும்" என்று குறிப்பிட்டுள்ளது.

அதேநேரத்தில் சீனாவின் இந்தச் செயலுக்கு தாய்வான் பாதுகாப்புத்துறை அமைச்சர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

உலக செய்திகள்

# கடலுக்கடியில் அணு ஆயுதத்தைத் தாங்கிச்சென்று எதிரிகளின் போர்க் கப்பல்களை அழிக்கும் ட்ரோன்

## வடகொரியா அதிரடி சோதனை



வடகொரியா கடலுக்கு அடியில் பயணித்து எதிரி கப்பல்கள் மற்றும் துறைமுகங்களை அழிக்கும் வகையிலான அணு ஆயுத ட்ரோன் சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

அமெரிக்காவும், தென்கொரியாவும் இணைந்து கடந்த சில நாட்களாக தொடர்ந்து கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இதற்கு வடகொரியா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பல்வேறு ஏவுகணைகளையும் அவ்வப்போது சோதனைசெய்து வருகின்றது. அண்டைநாடுகளை அச்சுறுத்தும் வகையில் அணு ஆயுத சோதனையையும் வடகொரியா நடத்தி வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் கடலுக்கு அடியில் ட்ரோன் மூலமாக அணு ஆயுத சோதனை நடத்தியதாக வடகொரியா அறிவித்துள்ளது. கடலுக்கு அடியில் சென்று தாக்கும் திறன் கொண்ட இந்த அணு ஆயுத ட்ரோன் சோதனைக்கு 'ஹெயில் -2' என பெயரிடப்பட்டுள்ளது.

இந்தச் சோதனையில் ட்ரோனாது சுமார் 71 மணிநேரத்துக்கும் மேலாக நீருக்கு அடியில் பயணித்து கிழக்கு துறைமுக நகரமான டான்சோன் அருகே கடலில் போலி போர்க் கப்பலை வெற்றிகரமாக வெடிக்கச் செய்துள்ளதாக வடகொரியாவின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த ட்ரோன் சோதனை மூலமாக கடலில் 1000 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இலக்குகள் மீதும் அபாயகரமான தாக்குதல் நடத்தும் திறனுள்ளது என்பதை வடகொரியா நிரூபித்துள்ளது. முன்னதாக கடந்த மாதம் வடகொரியா 'ஹெயல் 1' என்று பெயரிடப்பட்ட அணு ஆயுத சோதனையை நடத்தியதாக அறிவித்தது. இந்த 'ஹெய்ல் 1' ட்டிரோனானது செயற்கை சுனாமியை உருவாக்கும் தன்மை கொண்டது என்றும் குறிப்பிட்டிருந்தது. ஆனால், வடகொரியாவின் இந்த அச்சுறுத்தல் மிகைப்படுத்தப்பட்டது என நம்புவதாக தென்கொரிய இராணுவம் விமர்சித்துள்ளது.

# பொம்மன் — பெள்ளியை சந்தித்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி



ஒஸ்கர் விருது வென்ற 'தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்' (The Elephant Whisperers) ஆவணப்படத்தில் நடித்த பொம்மன் – பெள்ளி தம்பதியை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பல்வேறு திட்டப் பணிகளை தொடங்கி வைப்பதற்காக நேற்றுமுன்தினம் தமிழகத்துக்கு வருகைதந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலை மைசூரிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் பந்திப்பூருக்குச் சென்ற பிரதமர், அங்குள்ள புலிகள் காப்பகத்துக்குச் சென்று, அங்கு 20 கிலோமீற்றர் ஜீப்பில் பயணித்து வனவிலங்குகளைப் பார்வையிட்டார்.

பின்னர் முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாமுக்குச் சென்ற பிரதமர், அங்கு பொம்மன் - பெள்ளி தம்பதியை சந்தித்தார்.

அப்போது அவர்களின் வாழ்க்கை முறை, குட்டி யானை வளர்ப்பு உள்ளிட்டவற்றை பிரதமர் மோடி கேட்டறிந்ததுடன், அவர்களின் சேவைக்குப் பாராட்டு தெரிவித்தார்.

# புதிய மைல்கல்லை எட்டிய வோர்னர்



2023ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் கடந்த 31ஆம் திகதிமுதல் நடைபெற்றுவரும் நிலையில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ், டெல்லி கேப்பிடல்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் டெல்லி அணியின் தலைவர் டேவிட் வோர்னர் புதிய மைல்கல்லை எட்டினார்.

இந்த ஆட்டத்தில் 200 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி அணி, 142 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது. இந்தப் போட்டியில் டேவிட் வோர்னர் 26 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, ஐ.பி.எல். தொடரில் 6,000 ஓட்டங்களைக் கடந்த முதல் வெளிநாட்டு வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

அதுமட்டுமன்றி, ஐ.பி.எல். தொடரில் குறைந்த இன்னிங்ஸில் (165) 6,000 ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்தார். இந்தப் பட்டியலில் விராட் கோஹ்லி (188 இன்னிங்ஸ்), ஷிகர் தவான் (199) அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

# ரொனால்டோவின் சாதனையை முறியடித்த மெஸ்ஸி



உதைபந்து உலகின் நட்சத்திர வீரரான ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த லியோனல் மெஸ்ஸி, ஐரோப்பிய உதைபந்து கிளப் அணிகளுக்காக அதிக கோல் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்தார்.

கிறிஸ்ரியானோ ரொனால்டோ 701 கோல் அடித்திருந்த நிலையில், மெஸ்ஸி 702 கோல்கள் அடித்து இவ்வாறு சாதனை படைத்தார். மேலும் ரொனால்டோவை விட 105 போட்டிகள் குறைவாக விளையாடி அதிக கோல்கள் அடித்து மெஸ்ஸி சாதனை படைத்துள்ளார்.

# ஒலிம்பிக் 2024இல் புதிய போட்டி அறிமுகம்



(ரமணி)

பரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளில் அறிமுகமாகும் புதிய ரேஸ் வோக்கிங் கலப்பு பாலின போட்டிக்கான வடிவமைப்பை உலக தடகளப் போட்டிகள் சனிக்கிழமை வெளியிட்டன.

ஆண்களுக்கான 50 கிலோமீற்றர் ஓட்டப்பந்தய நடைப்பயணத்தின் இடத்தைப் பிடிக்கும் புதிய மரதன் பந்தய நடை கலப்புத் தொடர் ஓட்டத்தில் 25 அணிகள் பங்கேற்கும். ஒவ்வொரு அணியிலும் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் தடகள வீராங்கனைகள் இருப்பார்கள். அவர்கள் மாறி மாறி மரதன் தூரத்தை (42.195 கி.மீ.) "தோராயமாக சமமான தூரத்தில்" நான்கு கால்களில் முடிப்பார்கள்.

உலக தடகளத்தின்படி மரதன் தூரம் "தடகளத்தில் தற்போதுள்ள பிரபலம் மற்றும் ஒலிம்பிக் போட்டிகளின் மரபுகளுடன் இணைப்பதால்" தேர்ந்தெடுக்கப்பட்டது.

புதிய நிகழ்வு ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 20 கி.மீ. ஓட்டப்பந்தய நடைப்போட்டிகள், ஈபிள் கோபுரத்தின் அடிவாரத்தில் ஒரு கிலோமீற்றர் சுழல் போன்ற அதேபோக்கில் நடைபெறும். மேலும், இது சுமார் மூன்று மணிநேரத்தில் நிறைவடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

"இந்த வடிவம் புதுமையானதாகவும் ஆற்றல்மிக்கதாகவும் கணிக்க முடியாததாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது ரசிகர்களால் எளிதில் புரிந்துகொள்ளப்படும் பரபரப்பான போட்டியைக்கொண்டிருக்கும். முக்கியமாக, ஒலிம்பிக் டிராக் மற்றும் பீல்ட் திட்டத்தில் முழு பாலின சமத்துவத்தை முதல் முறையாக இது உறுதிசெய்யும் என்று நாங்கள் நம்புகிறோம்'' என்று உலக தடகள தலைமை நிர்வாக அதிகாரி ஜோன் ரிட்ஜன் கூறினார். உலக தடகள புதிய போட்டிக்கான அணி தகுதி பாதையை இன்னும் வெளியிடவில்லை.

# மட்டு. மகாஜனாக் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டியில் பாரதி இல்லம் சம்பியன்




(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மகாஜனா கல்லூரி பெண்கள் தேசிய பாடசாலையின் 2023ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி அண்மையில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் எஸ்.சாந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்வில்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி. வாசுதேவனும் சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். ரவிராஜாவும், கௌரவ அதிதியாக கல்லூரியின் முன்னாள் அதிபர் கே. அருமைராஜாவும் கலந்துகொண்டனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் பாரதி இல்லம் 599 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், கம்பன் இல்லம் 482 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், இளங்கோ இல்லம் 295 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இதன்போது இடம்பெற்ற அணிநடை, உடற்பயிற்சிக் கண்காட்சி, பேண்ட் வாத்தியம் ஆகியன அனைவரதும் கவனத்தை ஈர்த்தன.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com





இன்றைய போட்டி

போட்டி இல. - 15

லக்னோ எதிர் பெங்களூர்

நேரம் - இரவு 7.30

இடம் - பெங்களூர்


# தேசிய மட்ட சதுரங்க சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலய மாணவர்கள் தெரிவு




(மாளிகைக்காடு நிருபர்)

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கான (ஆண், பெண்) தேசிய இளைஞர் சதுரங்க சம்பியன்ஷிப் போட்டியில் 12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் மாளிகைக்காடு கமு/கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலய மாணவர்களான எம்.எச்.எம்.ருஸைக், என்.ஷராப் அஹமட் ஆகிய மாணவர்கள் பங்குபற்றி முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றிருந்தார்கள்.

இம் மாணவர்கள் பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயத்தில் நடைபெறும் தேசிய இளைஞர் சதுரங்க சம்பியன்ஷிப்-2023 தேசியமட்ட இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளார்கள்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7